எழிலுறு காட்சிகளுடன்
அழகுறப்படம் பிடித்திட
விஜயம் செய்யுங்கள்

அஜந்தா
போட்டோ
63, சங்கிலியன் வீதி,
(முத்திரைச் சந்தையடி)
நல்லூர்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

மங்களகரமான நிகழ்ச்சிகளை
திங்களெனத் துலங்கிட
வீடியோ படம்பிடித்திட

அஜந்தா
வீடியோ
63, சங்கிலியன் வீதி,
(முத்திரைச் சந்தையடி)
நல்லூர்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 30 செவ்வாய்க்கிழமை (14 – 03 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 107

★ பூநகரி முகாமை அகற்றுதல் ★ மீன்பிடித் தடை தளர்வு

★ கிழக்கில் ஆயுதங்களுடன் நடமாட புலிகளுக்கு அனுமதி

★ பொருளாதாரத் தடையை முற்றாக நீக்குதல்

புலிகளின் நான்கு கோரிக்கைகளையும் ஸ்ரீலங்கா அரசு முற்றாக நிராகரித்தது!

தலைவர் பிரபாவுக்கு அனுப்பிய கடிதத்தில் சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14

பூநகரி முகாமை அகற்றுதல் உட்பட விடுதலைப் புலிகளின் நான்கு கோரிக்கைகளையும் ஸ்ரீலங்கா அரசு நிராகரித்துள்ளது.

இந்தக் கோரிக்கைகளுக்கு இடமளிக்கப்பட்டால் இராணுவ ரீதியில் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப் புலிகளுக்கு அறிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு அனுப்பி வைத்த தமது பிந்திய கடிதத்திலேயே நான்கு கோரிக்கைகளையும் நிராகரிப்பது பற்றிய தகவலை அவர் அறிவித்திருக்கிறார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

★ வடக்கிற்கு பாதுகாப்பான பாதை ஒன்றைத் திறப்பதற்கு வசதியாக பூநகரி முகாமை அகற்றுதல்

★ வடபிரதேசக் கடலில் மீன்பிடிப்பதற்கான தடையை முற்றாகத் தளர்த்துதல்.

★ கிழக்கில் விடுதலைப் புலிகள் போராளிகள் ஆயுதபாணிகளாக நடமாட அனுமதித்தல்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

இராணுவத்தின் அழுத்தத்துக்கு சந்திரிகா அடிபணிந்து விட்டார்!

செய்தியாளர் மாநாட்டில் புலிகள் அறிவிப்பு

லண்டன், மார்ச் 14

ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, இராணுவம் மற்றும் பேரினவாத சக்திகளின் அழுத்தங்களுக்கு அடி பணிந்து விட்டார்.

அதனால் அவருக்கு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் உரிய அக்கறை இப்போது இல்லை.

விடுதலைப் புலிகளின் சர்வதேச அமைப்பு இவ்வாறு தெரிவித்துள்ளது.

சமூக அபிவிருத்திக்கான சர்வதேச உச்சி மாநாடு டென்மார்க் தலைநகரில் நடைபெற்ற வேளை விடுதலைப் புலிகளின் சர்வதேச அமைப்பைச் சேர்ந்தவர்கள் பத்திரிகையாளர் மாநாடு

(6 ஆம் பக்கம் பார்க்க)

உண்ணாவிரதிகள் நிலை ஆபத்தான கட்டத்தில்!

இருவர் மயங்கி விழுந்தனர்

யாழ்ப்பாணம், மார்ச்.14

13 ஆவது நாளாகத் தொடர்ந்து உண்ணா விரதம் மேற்கொண்டு வரும் யுத்தக் கைதிகள் 16 பேரின் உடல் நிலை மிக மோசமான கட்டத்தை அடைந்துள்ளது.

கைதிகளில் இருவர் மயக்கமடைந்துள்ளனர்.

சமன் திலக, சுனில் ஆகிய இரு கைதிகளுமே மயக்கமடைந்துள்ளனர். நேற்று முன்தினம் இரவு மலசல கூடத்துக்குச் செல்வதற்காக எழுந்த சமயம் இவர்கள் இருவரும் மயங்கி விழுந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

உண்ணாவிரதிகளில் பெரும்பாலானோர் படுக்கையில் இருந்து எழுந்திருக்க முடியாத நிலையில் உள்ளனர்.

குடல்புண் காரணமாக வயிற்று வலியினால் கைதிகள் அவதிப்பட்டு வருகின்றனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் தினமும் சென்று கைதிகளை அவதானித்து வருகின்றனர்.

உண்ணா விரதத்தின் 13 ஆவது நாளான நேற்று வரை அரச தரப்பில் இருந்து கைதிகளுக்கு பதில் எதுவும் வரவில்லை.

அரசின் பாராமுகம் குறித்து கைதிகள் பெரிதும் ஏமாற்றமடைந்தவர்களாக காணப்பட்டனர்.

(ஐ-4-7)

மனிதாபிமான ரீதியில் நடவடிக்கை எடுக்க செஞ்சிலுவை கோரிக்கை!

கொழும்பு, மார்ச். 14

யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள யுத்தக் கைதிகளின் பிரச்சினைக்கு மனிதாபிமான அடிப்படையில் தீர்வு காண உடனடி நடவடிக்கையை எடுக்குமாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்திருப்பதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சுமார் ஐந்து வருடங்களாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள இவர்களை விடுவிக்கும் விவகாரம் சர்வதேச மனிதாபிமான சட்டத்துக்கு முரணான வகையில் அரசியல் சலுகையில் தங்கவைக்கப்பட்டிருப்பது குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு கண்டனம் தெரிவித்துள்ளதாகவும் அந்த [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-4)

யுத்தக் கைதிகளைப் பார்க்க விக்ரர் ஐவன் வருகிறார்

யாழ்ப்பாணம், மார்ச். 14

பிரபல சிங்களப் பத்திரிகையாளரும், ''ராவய'' ஆசிரியரும், அரசியல் விமர்சகருமான திரு. விக்டர் ஐவன் நாளை யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள சிங்கள யுத்தக் கைதிகளைப் பார்வையிடுவதற்காகவே அவர் இங்கு வரவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளாலி ஊடாக யாழ்ப்பாணம் வரவுள்ள அவருடன் ''த ஐலண்ட்'' பத்திரிகையைச் சேர்ந்த திரு. சிவராமும் (தராக்கி) வரவுள்ளார்.

(ஐ-4-7)

முச்சந்தி முரளி



உவர் ராவுக்கு எப்பவும் நித்திய கண்டம் பூரண ஆயுசு தான் பாருங்கோ......!

ஆயிரம் பௌத்த பிக்குகள் யாழ். செல்லத் திட்டம்!

கொழும்பு பத்திரிகை தகவல்

கொழும்பு, மார்ச் 14

வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கத்தை வலியுறுத்தி —

தற்போது நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக தென் பகுதியிலிருந்து ஆயிரம் பௌத்த பிக்குகள் யாழ்ப்பாணத்துக்கு பாதயாத்திரை செய்யத் திட்டமிட்டுள்ளனர்.

கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

மூன்று பௌத்த நிக்காயாக்களையும் சேர்ந்த தலைவர்களை அந்தப் பாதயாத்திரையில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

இரு சாராருக்கும் இடையே

[6 ஆம் பக்கம் பார்க்க]

தீவிபத்தில் கடைகள் நாசம்

கொழும்பு, மார்ச். 14

கிராண்ட்பாஸில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தினால் மரப் பலகைகளினால் அடிக்கப்பட்ட 25 தற்காலிகக் கடைகளும், நிரந்தரக் கட்டடத்தில் அமைந்த ஒரு கடையும் முற்றாக எரிந்து சாம்பலாகின.

குப்பி விளக்கு விழுந்ததால் ஒரு கடையில் பரவிய தீயே விபத்துக்குக் காரணம் என்று கூறப்பட்டது.

உடனடியாகத் தீயணைப்புப் படையினர் விரைந்து வந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இத்தீவிபத்துச் சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை.

(ஐ)

மராட்டிய முதல்வராக சிவசேனைப் பிரதிநிதி!

புதுடில்லி, மார்ச் 14

மகாராஷ்டிர சட்டசபைத் தேர்தலில் ஆட்சி அமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மையை எந்தக் கட்சியும் பெறாத நிலையில் —

பாரதீய ஜனதா — சிவசேனை கூட்டணியை ஆட்சி அமைக்க ஆளுநர் பி. ஸி அலெக்ஸாண்டர் அழைத்திருக்கிறார்.

சிவசேனை 74 தொகுதிகளிலும் பாரதீய ஜனதா 63 தொகுதிகளிலும் வெற்றியீட்டி மொத்தம் 137 இடங்களைப் பெற்றுள்ளபோதிலும் அறுதிப் பெரும்பான்மையை எட்டுவதற்கு இன்னும் எட்டு சட்டசபை உறுப்பினர்களின் ஆதரவு அக்கூட்டணிக்குத் தேவை.

சட்டசபைக்கு தெரிவாகியுள்ள 46 சுயேச்சையாளர்களில் ஒரு பகுதியினரின் ஆதரவுடன் அறுதிப் பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள அக்கூட்டணி முயன்று வருகின்றது.

சட்டசபைக்கு தெரிவு செய்யப்பட்ட சிவசேனை — பாரதீய ஜனதாக்கட்சி உறுப்பினர்கள் நேற்றுக்கூடி தமது சட்டசபைக்குழுத் தலைவராக—

(6 ஆம் பக்கம் பார்க்க)

மாநில தேர்தல்களில் தோல்வி!

காங்கிரஸ் அதிருப்தியாளர் ராவுக்கு எதிராக உத்வேகம்

புதுடில்லி, மார்ச். 14

மகாராஷ்டிரா, குஜராத் மாநில சட்டசபைத் தேர்தல்களில் ஆட்சியை காங்கிரஸ் கட்சி பறிகொடுத்ததை அடுத்து—

இந்தியாவின் மத்தியில் ஆட்சியிலிருக்கும் பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் கட்சி அரசுக்கும், கட்சித் தலைவர் நரசிம்மராவுக்கும் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தலில் கட்சிக்கு ஏற்பட்ட தோல்வியால் உத்வேகம் பெற்றிருக்கும் கட்சி அதிருப்தியாளர்கள் தற்போது எதிர்ப்புக் கொடி தூக்கியிருக்கிறார்கள்.

கட்சியின் போக்கில் மாற்றம் வேண்டும் என்ற கோரிக்கையுடன் கட்சியின் அதிருப்தி எம் பிக்கள் இருபது பேர் நேற்று தலைநகர் புதுடில்லியில் கூட்டிய கூட்டத்தில் பெரும் எண்ணிக்கையான காங்கிரஸ் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

''இது காங்கிரஸுக்கு 'செய்; அல்லது செத்து மடி' என்ற நிலை. 'வாழ்வா? சாவா?' என்ற போராட்டம். கட்சி தனது வேர்களை தேடிச் செல்ல வேண்டும்; இந்திய பாமர மக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டிய இறுதிச் சந்தர்ப்பம்'' — என்று இந்தக் கூட்டத்தைக் கூட்டிய பிரதிநிதி ஒருவர் கூறினார்

பிரதமர் ராவின் தலைமைப் பதவிக்கு குறிவைக்கும் திட்டம் இந்தக் கூட்டத்தில் வெளிப்படுத்தப்படாத போதிலும், ராவுக்கு ஆதரவாக இக்கூட்டத்தில் கோஷம் எழுப்பிய இரு காங்கிரஸ் தொண்டர்கள் நையப்புடைக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்டனர்.

சுழிபுரம் சவுக்கடி கடற்பகுதியில் 2 மீனவர் படையினரால் கைது!

மோதல் தவிர்ப்பு உடன்படிக்கை தொடர்ந்து மீறல்

யாழ்ப்பாணம், மார்ச் 14

தற்போது அமுலில் உள்ள போர் இடைநிறுத்தத்தை மீறும் மற்றொரு செயலாக—

சுழிபுரம் சவுக்கடி கடற்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் இருவர் கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இவர்கள் தொழிலில் ஈடுபட்டிருந்த சமயம் வந்த கடற்படையினர் இருவரையும் தாக்கியதுடன் மீன்பிடி உபகரணங்களையும் நாசமாக்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.

பின்னர் இவர்கள் இருவரையும் கடற்படையினர் தமது கப்பலில் ஏற்றி காரைநகர் கடற்படைத் தளத்துக்குக் கொண்டு சென்றதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மீனவர்களின் பிளாஸ்ரிக் படகினையும் படையினர் கட்டி இழுத்துச் சென்றுள்ளனர்.

வைத்திலிங்கம் உதயகுமார் (வயது 28) ஆண்டிஐயா தங்கராசா (வயது 29) ஆகிய

[6 ஆம் பக்கம் பார்க்க]

சனியன்று கைதான மீனவர் நேற்று விடுவிக்கப்பட்டனர்

வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் கடந்த சனியன்று காலை தொழிலில் ஈடுபட்டிருந்தவேளை கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட மீனவர்கள் மூவரும் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

காங்கேசன்துறையில் வைத்து இவர்கள் மூவரும் படையினரால் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பிரதி[illegible] நேற்று மா[illegible]

அங்கிருந்து ''டி - டான்ஸர்'' கப்பலைப் பின் தொடர்ந்து தமது படகில் இவர்கள் மூவரும் பருத்தித்துறையை வந்தடைந்தனர்.

வல்வெட்டித்துறை ஸ்ரீ முருகன் குடியேற்றத்தை சேர்ந்த தேசோ மயானந்தன் தேவசிகாமணி (வயது 59), கந்தசாமி இராசேந்திரம் (வயது 49), தம்பிஐயா தர்மகுலசிங்கம் (வயது 38) ஆகிய மூன்று மீனவர்களுமே விடுவிக்கப்பட்டவர்களாவர்.

(ஐ-173)

கடலில் 3மைல்களுக்கு மேல் வராதீர் என எச்சரித்தனர்!

விடுதலையான மீனவர் பேட்டி

வடமராட்சி, மார்ச். 14

படகுடன் காங்கேசன்துறைக்கு கொண்டு சென்ற படையினர் அங்கு வைத்து எங்களைத் தனித்தனியே மிரட்டி விசாரணை செய்தனர். கடலில் 3 மைல்களுக்கு மேல் வரக்கூடாது என்று அவர்கள் எம்மை எச்சரித்தனர்.

— படையினரால் நேற்று விடுவிக்கப்பட்ட வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மீனவர்களில் ஒருவரான தம்பிஐயா தர்மகுலசிங்கம் மேற்கண்டவாறு உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அவர் தமக்கு நேர்ந்த அனுபவம் குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

சனியன்று அதிகாலை பருத்தித்துறைக்கு நேராக கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்தோம். அச்சமயம் திடீரென படகுகளில் வந்த கடற்படையினர் எங்களைக் கண்டு கொண்டனர்.

உடனடியாக என்னுடன் வந்த இருவரையும் பிடித்து தமது விசைப் படகில் ஏற்றினர். பின்னர் என்னுடன் எனது படகில் கடற்படையினர் நால்வர் ஏறிக்கொண்டனர்.

தமது படகின் பின்னால்

(6 ஆம் பக்கம் பார்க்க)

வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாக உறுப்பினர் தெரிவும்

மானிப்பாய் சோவிற்பற்று வணிகர் கழக வருடாந்த பொதுக்கூட்டமும், நிர்வாகசபைத் தெரிவும் நாளை 15 - 03 - 1995 ஆம் ஆண்டு புதன்கிழமை மாலை 3 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறஇருப்பதால், கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து சகல வணிகர்களும் அன்றையதினம் 2 மணிக்கு தங்கள் வர்த்தக நிலையங்களை பூட்டி கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

— செயலாளர்.

(8384)

நூல் வெளியீட்டு விழா

இருபதாம் நூற்றாண்டின்
ஈழத்து இசை முன்னோடிகள்
ஆசிரியர்
கலாஜோதி அ. நா சோமாஸ்கந்தசர்மா
(இணைப்பாளர், வாத்தியத்துறை)
யாழ்/பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகம்
பிரதம விருந்தினர்
கவிஞர், புதுவை இரத்தினதுரை அவர்கள்
(பொறுப்பாளர், விடுதலைப்புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்)

காலம்: நாளை (15 - 03 - 1995) புதன்கிழமை
பி ப 1 45 மணி
இடம்: இராமநாதன் நுண்கலைக் கழகம்,
மருதனார்மடம்.

நிகழ்ச்சி நிரல்

★ மங்களவிளக்கேற்றல்
திருமதி கிரிசாந்தி ரவீந்திரா
(நடன விரிவுரையாளர், இ. நு. க.)
திருமதி நந்தினி விஜயரட்ணம்
(வீணை விரிவுரையாளர் இ. நு க.)
★ இறைவணக்கம்
செல்வி சேய்மணி திருஞானசம்பந்தன்
★ அமைதி வணக்கம்
★ வரவேற்புரை
செல்வி ஸ்ரீமோகனா செல்லத்துரை
(செயலர் கவின் கலைமன்றம்)
★ தலைமையுரை
செல்வன் எஸ். சிவசிவா
(தலைவர், கவின் கலைமன்றம்)
★ அறிமுக உரை
திரு. நா. வீ. மு நவரத்தினம் அவர்கள்
(இணைப்பாளர் பண்ணிசைத்துறை. இ. நு க.)
★ வாழ்த்துரைகள்
கலாநிதி சபா. ஜெயராஜா அவர்கள்
(தலைவர், இராமநாதன் நுண்கலைக்கழகம்)
பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர் அவர்கள்
(தலைவர், இந்துநாகரிகத்துறை)
சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
(தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)
★ வெளியீட்டுரையும் நூல் வெளியீடும்
பிரதம விருந்தினர் அவர்கள்
★ மதிப்புரை
இயலிசைவாரிதி என் வீரமணிஐயர் அவர்கள்
★ சிறப்புரை
கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்கள்
(அமைப்பாளர் அகிலஇலங்கை கம்பன் கழகம்)
★ பதிலுரை
நூல் ஆசிரியர் அவர்கள்
★ நன்றியுரை
செல்வி விமலாம்பிகை இராஜதுரை
(உப பொருளாளர் கவின் கலைமன்றம்)
★ சிதவிருந்து
பிரமஸ்ரீ எஸ் உமாரமண சர்மா அவர்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கவின் கலை மன்றம்
இராமநாதன் நுண்கலைக் கழகம்

விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்
கிருபா நகைப் பூங்கா
333A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
[35664]

கம்பியூட்டர் பயிற்சி வகுப்புக்கள்

ஆரம்பம் 19 - 03 - 1995

Introduction to Computer and BASIC Language

★ கூடிய செய்முறைப் பயிற்சியும் தவணை முறைக் கட்டண வசதியும்
★ திறமையான மாணவர்களுக்கு மேலதிக பயிற்சிக் காலம்
★ பெறுமதியான சான்றிதழ்
★ திறமையான ஆசிரியர் குழு

விவரங்களுக்கு
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St. Peter's Lane,
Jaffna.
(ஒ-621)

பாலைதீவில் அமைந்துள்ள

அந்தோனியார் ஆலயம் சேதமடைந்த நிலையில்

குருநகர் மார்ச் 14

பாலைதீவு, அர்ச்: அந்தோனியார் ஆலயம் ஷெல் வீச்சுக்களால்சேதமடைந்துள்ளதாக அப்பகுதிக்குச் சென்று தங்கி கடல்தொழிலில் ஈடுபட்டுத் திரும்பிய மீனவர்கள் தெரிவித்தனர்.

சேதமடைந்திருந்த ஆலயப் பகுதிகளை சமீபத்தில் அங்கு மக்கள் சிர்செய்தனர் என்றும் அவர்கள் கூறினர்.

இதேவேளை மோதல் தவிர்ப்பு நிலையைப் பயன்படுத்தி மன்னார் - பள்ளிமுனைப் பகுதியைச் சேர்ந்த கிறிஸ்தவ மக்கள் 15 படகுகளில் ஆலயத்திற்கு வருகை தந்து நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டைச் சேர்ந்த மக்கள் அவ்வப்போது வள்ளங்களில் குடும்பம், குடும்பமாகப் பாலைதீவு - அந்தோனியார் ஆலயத்திற்குச் சென்று தங்கி தரிசித்து வருவதாகவும் அறியப்படுகிறது.

(ஒ-51)

ஸ்தான பாடசாலையின் வைரவிழா 2 தினங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 14

நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலையின் வைரவிழா நாளை 15 ஆம் திகதி புதன்கிழமையும், 18 ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறும்.

நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சங்கிலி வேந்தன் அரங்கில் நடைபெறும் முதல் நாள் விழாவில் பிரதம விருந்தினராக தமிழீழ கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை கலந்து கொள்வார்.

கவிஞர் நல்லை அமிழ்தன் தலைமையில் நடைபெறும் முதல் நாள் நிகழ்ச்சியில், சிவஸ்ரீ கு. குமரக்குருக்கள், வண. பி. நேசகுமார் அதிபர் திரு, சி. வைகுந்தசாமி, யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு வே. பொ. பாலசிங்கம், முன்னாள் அதிபர் திரு. க. சொக்கலிங்கம், நல்லூர் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. இராஜாமணி உட்பட பலர் கலந்து கொள்வார்கள்.

பாடசாலையில் நீண்ட காலம் பணியாற்றி ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. பி. ஸ்ரனிஸ்லஸ் விழாவில் கௌரவிக்கப்படுவார்.

பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் வைரவிழாவின் ஆரம்ப நாளன்று சங்கிலியன் நீரூற்று பழைய மாணவர் சங்க அலுவலகம், வைரவிழா மண்டபம் ஆகியனவும் திறந்து வைக்கப்படும்.

முதல் நாள் விழாவில் வைரவிழா இலக்கியப் போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கல், கவியரங்கம் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாம் நாள் விழாவில் பிரதம விருந்தினராக வலயம் - I கல்விப்பணிப்பாளர் செல்வி தி பெரியதம்பி கலந்து கொள்வார்.

பாடசாலை அதிபர் திரு. சி. வைகுந்தநாதன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் திருவாளர்கள் பூ புலேந்திரராஜா தமிழீழக் கல்விக் கழகத்தைச் சேர்ந்த க. அருண்மாஸ்டர், க சிவநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வர்.

(இ 111)

சதுரங்க சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ். லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் யாழ். இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம் நடத்தும் பாடசாலை அணிகளுக்கு இடையிலான சதுரங்கச் சுற்றுப் போட்டி இந்துக் கல்லூரி விடுதி மண்டபத்தில் இன்று பிற்பகல் 2 30 மணி முதல் ஆரம்பமாகும். போட்டி தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறும். ஞாயிறன்று பிற்பகல் 3 மணிக்கு பரிசளிப்பு வைபவம் இடம்பெறும்.

(ஐ)

செயலகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ். மாவட்ட திட்டமிடல், அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 30 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறும்.

பிரதேச திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்கள், அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுவர்.

(ஐ-3)

இலவச போசாக்குணவு

தென்மராட்சி. மார்ச் 14

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வு கழகத்தினர் — இப்பகுதியில் உள்ள ஐந்து வயதுக்கு உட்பட்ட 250 குழந்தைகளுக்கு போஷாக்கு உணவுகளை வழங்கி வருகின்றனர்.

வாரத்தில் திங்கள், வியாழன், சனி ஆகிய தினங்களில் கடலைப் பருப்புத் துவையல், பயற்றம் துவையல், கௌபி, சர்க்கரைச் சாதம்,: இலைக் கஞ்சி போன்றவை வழங்கப்படுவதுடன் போசாக்குக் குறைந்த சிறார்களுக்கு முக்கூட்டுமாப் பைக்கற்றுகளும் வழங்கப்படுகின்றன.

[இ-117]

பாடசாலை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 14

மானிப்பாய் சென். ஆன்ஸ் றோ. க. த. க வித்தியாலய ஸ்தாபகர் தினமும், பரிசளிப்பு விழாவும் நாளை புதன் கிழமை பிற்பகல் 5 மணிக்கு அதிபர் அருட்சகோதரி மேரி நிசெற்றா தலைமையில் நடைபெறும்.

சண்டிலிப்பாய் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். [ஐ]

★ ★ ★

ஆனைக்கோட்டை அ. மி. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் சி நாகையா தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.

★ ★ ★

மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு அதிபர் நா. சிவசோதி தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

(ஐ-117)

★ ★ ★

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அதிபர் ச. ஞானலிங்கம் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

[ஐ-117]

★ ★ ★

எல்லாளரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2.00மணிக்கு அதிபர் செல்வி இ. வேலுப்பிள்ளை தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும். [ஐ-117]

★ ★ ★

மிருசுவில் உசன் இராமநாதன் மகா வித்தியாலய கனிஷ்ட பிரிவு இல்ல மெய் வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2 00 மணிக்கு அதிபர் ஐ. வரதராசா தலைமையில் நடைபெறும். [ஐ-117]

திருமலைத் தமிழர்களின் சுகாதார வசதி புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

திருகோணமலையில், தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளிலுள்ள வைத்திய நிலையங்கள் எதுவித வசதியுமற்ற நிலையில் இருக்கின்றன.

இதேவேளை, திருகோணமலை நகரிலும், சிங்களக் குடியேற்றங்கள் அமைந்துள்ள பகுதிகளிலும் உள்ள மருத்துவமனைகள் அதிக வசதிகளுடன் இயங்குகின்றன. இவ் வசதிகளை அரசே வழங்கியும் வருகின்றது

தமிழர் வாழும் பிரதேசங்களில் பதினொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் உள்ளன. ஆனால் இருவர் மட்டுமே அங்கு கடமையாற்றுகின்றனர்.

நூற்றி இருபத்தாறு தாதியர்கள் இருக்க வேண்டிய நிலையில் நாற்பத்தாறு தாதிகளே - அங்கு உள்ளனர்.

45 சுகாதார வைத்திய பரிசோதகர்கள் தேவையான நிலையில் 15 பேர் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாட்டாளிபுரம், நல்லூர், இலக்கந்தை, தங்குவெளி ஆகிய மூதூர் கிராமங்களுக்கு மருத்துவ சேவை முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது.

ஈச்சிலம்பத்தை பிரதேச மருத்துவமனை மூடப்பட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் இப் பகுதிகளுக்குச் சென்று மருத்துவ உதவிகளைச் செய்வதில்லை என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது. (ஐ-5)

வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழக வாத்தியத்துறை இணைப்பாளர் கலாஜோதி அ நா. சோமாஸ்கந்தசர்மா எழுதிய ''இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இசை முன்னோடிகள்'' என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் நடைபெற உள்ளது.

இராமநாதன் நுண்கலைக் கழக கவின்கலை மன்றத்தின் ஏற்பாட்டில் நுண்கலைக்கழக மண்டபத்தில் நடைபெறும் இவ்விழாவில் —

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நூல் வெளியீட்டுரையையும் புதுவை இரத்தினதுரையே நிகழ்த்துவார். மதிப்புரையை இயலிசைவாரிதி என்.வீரமணி ஐயரும். சிறப்புரையை கம்பவாரிதி இ. ஜெயராஜும் நிகழ்த்துவர். முதல் பிரதியை தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தினர் பெறுவர். (அ)

கவிதை நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 14

''யாழமுதன் கவிதைகள்'' நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் திரு.வே. பாலகுமாரன் கலந்து கொள்வார். (ஐ)

அமெரிக்கன்மிஷன் ஒரு பயனுள்ள நதி அதன் தூய்மையை காக்க வேண்டும்

வருடாந்தக் கூட்டத்தில் பேராயர் ஜெபநேசன்

அமெரிக்கன்மிஷன் என்பது ஒரு பயனுள்ள நதி. அது பக்தர்களினாலும் கல்விமான்களினாலும் தூய்மைவாதிகளினாலும் நமது நாட்டுக்குச் கொண்டுவரப்பட்டது நதியின் தூய்மையையும் நீரோட்டத்தையும் காப்பாற்றி இலங்கை மக்கள் அனைவருமே இதன் பயன்களைப் பெற ஆவன செய்ய வேண்டும் அதுவே நமக்கு முன்பாக உள்ள கடமை.

தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீனத்தின் 48 ஆவது வருடாந்தக் கூட்டம் அண்மையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்ற போது யாழ்ப்பாண ஆதீனப் பேராயர் அதி வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் மேற்கண்டவாறு கூறினார்.

பேராயர் தலைமையில் கடந்த மாதம் 23ஆம் 24 ஆம், 25ஆம் திகதிகளில இக் கூட்டம் நடைபெற்றது.

இம் முறை அமெரிக்கப் பிரதிநிதிகளும் இந்த வருடாந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் செயலாளராக வண. சி. ரி. றெபேட்ஸ்தெரிவு செய்யப்பட்டார் பொருளாளராக திரு. சி. ஜெயரத்தினம் தெரிவு செய்யப்பட்டார் நிர்வாக சபைக்கு வண. எஸ் ஜெபநேசன், வண. அ. ஜெயக்குமாரன், வண. டி. ஆர். அம்பலவாணர், திரு. அ. கதிர்காமர், திரு. ஜி. இராஜநாயகம், திரு சுரேஷ்தம்பு ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (இ)

எமதுதமிழ்மண்ணைஆண்டமுதல்மன்னன்

மறத்தமிழ் வேந்தன் இராவணனே

இளங்குமரன் கருத்து

புலிகளின் குரல வானொலியில்ஒலிபரப்பாகிவந்த இலங்கை மண்' தொடர் நாடகத்தின் கலைஞர்களுக்கான பாராட்டு விழாவும், ஆய்வரங்கும் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெற்றது.

வீரவேங்கை கஸ்ரோ (இயல்வாணன்) ஞாபகார்த்தமாக நடைபெற்ற அந்த நிகழ்வில் இடம்பெற்ற முக்கிய உரைகளின் தொகுப்பு இது

''எமது மண்ணின் வீர வரலாற்றையும் எழுச்சியையும் ''இலங்கை மண்'' நாடகம் எடுத்துக் காட்டுகிறது. ''புலிகளின் குரல்'' மூலம் மக்களுக்கு வழங்கப்பட்ட இந்த நாடகத்தின் மூலம் எமது தமிழ் மண்ணை ஆண்ட மறத்தமிழன் இராவணன் எமக்குத் தெரிந்த முதல் மன்னனாகப் போற்றப்பட்டு நினைவு கூரப்படுகிறான்''

கம்பராமாயணத்தில் அனைத்துத் [illegible] தமிழனின் தலைவனாகச் சித்திரிக்கப்பட்ட இராவணன் சிறுமைப்படுத்தப்பட்டுள்ளான்.

எமது இனத்திற்குப் பெருமை சேர்க்கும் தமிழரின் எழுச்சி வடிவமான அவன் இழிவு செய்யப்பட்டுள்ளான். மூல நூலிலிருந்து திரிபுபடுத்தியே இது செய்யப்பட்டுள்ளது. ஆகவே கம்பராமாயணம் உலக நூலாக, வரலாற்று நூலாக ஏற்றுக்கொள்ள அருகதையற்றது'

விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன் உரை நிகழ்த்தும்போது கூறியதாவது;

நாங்கள் கம்பனுக்கோ கம்பராமாயணச் செழுமைகளுக்கோ எதிரானவர்களல்லர். ஆனால் அது சொல்லும் செய்திப் பின்னணியில் இன அவமதிப்பு காணப்படுகிறது. சோழர் காலத்தில் கூட சமணம் பௌத்தம் இருந்தது. அவற்றை அனல்வாதம் புனல்வாதம் எனக்கூறி அழித்த இந்துக்கள் ஒரு கருத்து ரீதியான வடமொழிக் காவியத்தை அழிக்க மறுத்தது தவறு.

வந்தேறுகுடி அடிமை [illegible] கூடியதாக மூவாயிரம் ஆண் [illegible] வாழ்ந்த தமிழரை மத- கருத்து ரீதியில் வடமொழியில் உருவான வால்மிகி ராமாயணத்தை கம்பன் உள்வாங்கிக் காவியமாகப் படைத்துள்ளான். இதை மாற்ற தமிழகத்தில் பெரியார் பாடுபட்டார். ஆனால் அவரைப் பின்பற்றிய திராவிடர்கள் இன்றும் ஆரிய மாயைக்கு உட்பட்டேயுள்ளனர்.

கம்பன் தனது கம்பராமாயணத்தில் தமிழைக் கையாண்ட விதம் பாராட்டுக் குரியது. ஆனால் தமிழர்களுடைய தொன்மைக் காலத்தின் பின் நடந்தது என்ன? உயரிய மேல் தட்டு வர்க்கம் ராமாயணத்தைப் பயன்படுத்துகிறது. தமது ஆட்சித்தக் கருவியாக வட இந்தியர்கள் இதனைப்பயன்படுத்தினார்கள் இந்தியாவில் தொலைக்காட்சியில் காட்டப்பட்ட இராமாயணத் தொடர் பாரதிய ஜனதா கட்சியின் பெருவெற்றிக்கு காரணமாக அமைந்தது. எமது நாட்டிலும் இந்திய மாயை இருந்தது. பெரியார் போல் நாம் செருப்பால் அடிக்கவில்லை இந்தியா உதவும், இந்தியா [illegible] என்ற மயக்க நிலைக்கு இந்தக் காவியமும் காரணமாகி விட்டது. இந்த நிலை மாறவேண்டும்.

அதற்கு இலங்கை மண் போன்ற கருத்துச் செறிவு கொண்ட தகவல்கள் வெளிவர வேண்டும்.

பூநகரி பற்றி நாம் அடிக்கடி பேசும் போது அது எமது தொல்குடி என்ற வரலாறு வர வேண்டும். எமது போராட்டம் எதிர்காலத்தை மட்டுமன்றி இறந்த காலத்தையும் மீளப் பார்த்து பெருமைப்படும் வாய்ப்பை அளிப்பதாகவே அமைகிறது'

''இலங்கை மண்'' நாடகத்தின் வீச்சு இங்கேயுள்ள போராட்டத்தைத் தொட்டுச் செல்கிறது. வரலாறுகள் அனைத்தும் திரிவுபடுத்தப்பட்டது தெரியும். அந்த வகையில் பார்த்தாலும் கூட எமது மண்ணில் நடந்த சம்பவங்களை விளக்கும் போது கம்பராமாயணத்தின் கருவில் உள்ள இனத்துக்கு களங்கத்தை ஏற்படுத்தும் செய்தியை வெளிப்படுத்தி உண்மை நிலையை எடுத்துக் காட்ட முன்வருவது பாராட்டப்படவேணடும்.

யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி பேசும்போது கூறியதாவது.

ஓர் இனத்தின் வரலாற்றையும் பெருமையையும் மூடி மறைப்பது அதன் முதுகெலும்பை ஒடிப்பதற்கு நிகரானது. மறைக்கப்பட்ட இராவணனின் வீரம் எவ்வாறானது என்பது தெரியும். இதுவரை எமக்கு எதிரான வரலாற்றையே நாம் சுமந்துள்ளோம் இதை மாற்றி எமது வரலாற்றுச் சிறப்பையும் வீரத்தையும் வெளிக்கொண்டும் வகையில் திரிவுபடுத்தப்பட்ட கறைகளை நீக்கி இன்றைய விடுதலைப் போருக்கு உரமூட்டும் வகையில் 'இலங்கை மண்' தயாரிக்கப்பட்டு புலிகளின் குரல் வானொலியூடாக மக்களுக்குத் தரப்பட்டுள்ளது. இது எமது மக்களுக்கு சுதந்திர உணர்வையூட்டி நாட்டின் விடுதலைக்கு வழியமைக்கும்.

இலங்கை மண் தொடர் நாடகத்தின் சில பகுதிகள் நடித்துக்காண்பிக்கப்பட்டன. ஆய்வரங்கமும் இடம்பெற்றது.

இயலிசை வாரிதி நா. வீரமணி, வைத்திய கலாநிதி சி. சிவபாலன், பேராசிரியர் அ. சண்முகதாஸ், சைவப்புலவர் சி. செல்லத்துரை, கவிஞர் புதுவை இரத்தினதுரை, இ. ஜெயராஜ், சி. சிவமகாராசா, சி. வேலாயுதம், பொன். கணேசமூர்த்தி, செல்வி கலாநிதி சண்முகநாதபிள்ளை, திரு. சு. சோமசுந்தரம் ஆகியோரும் பேசினார்கள்.

அரசியல் துணைப் பொறுப்பாளர் திரு. சி. கரிகாலன் கலைஞர்களுக்கு விருது வழங்கிக் கௌரவித்தார். நிதர்சனப் பொறுப்பாளர் திரு. தமிழன்பன் மங்கள விளக்கேற்றினார்.

(க-111)

பூநகரிப்பாதையை திறக்க முடியாத அரசு இனப்பிரச்சினையை எப்படித் தீர்க்கும்?

கருத்தரங்கில் தமிழ்ச்செல்வன் கேள்வி

சாவகச்சேரி, மார்ச். 14

இப்போதுள்ள சமாதான சூழ்நிலை நிரந்தரமானது என்று நம்பமுடியவில்லை.

போரும், அழிவுகளும் இல்லாமல் எமது பிரச்சினைக்குத் தீர்வு கிட்டுமானால் அது வரவேற்கக்கூடியதே. அதற்கும் சந்தர்ப்பம் வழங்கியுள்ளோம்.

ஆனால் பூநகரிப் பாதையை திறக்க முடியாத அரசு எப்படி பிரச்சினையைத் தீர்க்கப் போகிறது?

தமிழர் பகுதிகளில் குடியேற்றங்களை நடத்திய பின்னர் அரசு எப்படித் தீர்வு ஒன்றை தரமுடியும்?

இதனை சர்வதேச உலகம் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களுக்கு அரசு செய்யும் அக்கிரமங்களை தெரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன்.

கிராமிய சமூக மேம்பாட்டு ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று கடந்த சனிக்கிழமை அல்லாரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திரு. எஸ். சேசவன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசுகையிலேயே திரு தமிழ்ச் செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் காவல் துறை, பொருண்மிய மேம்பாட்டுத் துறை, நீதித்துறை, நிர்வாகத் துறை என மக்களுக்காக பல கட்டமைப்புக்களை கொண்டு வந்துள்ளோம். எமது பலத்தால் தான் நாம் உயர்ந்து நிற்கின்றோம். எமது இனத்திற்கு பாதுகாப்பான பலம் தேவை. அத்துடன் அறிவியல் ரீதியான வளர்ச்சியும் அவசியமாகின்றது.

இந்நாட்டை உறுதியாகக் கட்டி எழுப்பக்கூடிய எதிர்கால சந்ததியை உருவாக்க வேகநடை போடவேண்டும். அதற்கு ஆசிரியர்கள் முழுமையாக முன்னேற வழிகாட்ட வேண்டும். திறமை, ஆற்றல் இருந்து சமுதாய கடமை, கட்டமைப்பு வளமும் உள்ளவன் வேகமாக வளருகின்றான்.

யப்பானில் ஆயிரக்கணக்கான பொறியியலாளர்கள் உருவாகின்றார்கள். அவர்களது சிந்தனையும். எமது சிந்தனையும் மாறுபடுகின்றது. நாம் சுயநல சிந்தனையால் பின்தங்கிச் செல்கின்றோம். இது பரம்பரை பரம்பரையாகத் தொடர்கிறது. இது மாறவேண்டும்.

எமது மண் புதிய பரிணாமத்தில் உள்ளது. இங்கு வந்த பத்திரிகையாளர் இதனைச் சொன்னார். இங்கே யாழ்ப்பாணத்தில் மக்களுக்குள்ள சுதந்திரத்தை கொழும்பிலோ அல்லது லண்டனிலோ பார்க்கவில்லை, காரணம் நள்ளிரவு ஒரு மணி, இரண்டு மணிக்கு கூட பெண்கள் நகைகள் அணிந்தவாறு சுதந்திரமாக போய் வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. எனவே உலக அரங்கில் நாம் ஒப்பீட்டளவில் உயர்ந்து இருக்கின்றோம்.

எமது சமுதாயத்தை சீர்குலைக்கும் எமது விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கும் இந்திய சினிமாப் படங்களையும், மோசமான புத்தகங்களையும் தடையாக கருதுகின்றோம் எமது மக்கள் வாழ்வு மேம்பாடு அடைய வேண்டும் என்பதற்காகவே அந்தத் தடையை விதித்துள்ளோம்—என்றார்.

இந்நிகழ்வில் விடுதலைப் புலிகள் அரசியல் துறையைச் சேர்ந்த பாப்பா, தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கம், பளை பிரதிக் கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம், தென்மராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.கணேசன், தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு.வெற்றிச் செல்வன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர் [அ-31]

பதவி உயர்வுகள் குறித்து மனக்கசப்பு

கொழும்பு, மார்ச் 14

இராணுவம் மற்றும் கடற்படையில் வழங்கப்படும் பதவி உயர்வுகள் தொடர்பாக இராணுவத் தலைமைக்கிடையே மனக்கசப்பு ஏற்பட்டுள்ளது.

— இவ்வாறு ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது. (உ)

விறகு மற்றும் பலகை தேவைக்காக

383 பயன்தரு மரங்கள் ஒரு மாதத்தில் தறிப்பு!

பொருண்மிய நிறுவனம் கவலை

யாழ்ப்பாணம், மார்ச் 14

இன்றைய போர்ச்சூழல் காரணமாக வன்னிப் பகுதியிலிருந்து நாளாந்த தேவைக்கு வேண்டிய மரங்களைக் கொண்டு வர முடியாதிருப்பதால் மக்கள் பெருமளவில் யாழ். குடாநாட்டுக்குள்ளேயே மரங்களைத் தறிக்கின்றனர். இது எமது குடாநாட்டை பாலைவனமாக்கக் கூடிய ஒரு செயல் என்பதை எம்மில் பலர் உணர்வதில்லை. இதை மனதில் கொண்டும் எமது மக்களின் விறகுத் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடனும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பாதுகாப்புப் பகுதி மரம் தறித்தலைக் கட்டுப்படுத்துகின்றது. இப்படிக் கட்டுப்படுத்தியும் மக்கள் மரத் தேவையைச் சிக்கனப்படுத்தாமையால் கூடிய அளவில் மரங்கள் தறிக்கப்படுகின்றன.

1995 ஜனவரி மாதம் தறிக்க அனுமதிக்கப்பட்ட நீண்டகால பிரயோசனமுள்ள மரங்களின் எண்ணிக்கையை அட்டவணைப்படுத்தி உள்ளோம். அதன்படி ஒரு மாதத்தில் மட்டும் விறகுத் தேவைக்காக 237 பயன்தரு மரங்களும் பலகைத் தேவைக்காக 146 பயன்தரு மரங்களும் தறிக்கப் பட்டுள்ளன.

இவ்வாறு ஒவ்வொரு மாதமும் மரங்கள் தறிக்கப்படுமாயின் யாழ். குடாநாட்டில் மரங்கள் எஞ்சி நிற்குமா? என்பதை மக்களே உணர்ந்து மரம் தறிப்பதைக் குறைத்துக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செய்திக் குறிப்பு ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

சாவகச்சேரி லயன்ஸ் கழக பரிசோதனை

தென்மராட்சி, மார்ச் 14

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை கிளினிக் கட்டடத்தில் சலரோகம், இரத்த அழுத்த வியாதிகளுக்கான பரிசோதனையையும் வைத்திய ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர்.

பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெறும் இச்சிகிச்சையில் லயன்ஸ் கழக வைத்தியர்களும், வைத்திய நிபுணர்களும் கலந்து கொண்டு வைத்திய பரிசோதனைகளையும் ஆலோசனைகளையும்வழங்கிவருகின்றனர். (ஒ-117)

கல்லூரிக்கு காணி நன்கொடை

யாழ்ப்பாணம், மார்ச் 14

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு விளையாட்டு மைதானம் இல்லாத குறை நீங்கி உள்ளது.

இக்கல்லூரிக்கு அருகில் உள்ள தமது காணியை தற்போது பொட்சுவானாவில் வாழும் திரு ஏ. ஜெயராசாவின் குடும்பத்தினர், திரு. ஜெயராசாவின் ஞாபகார்த்தமாக கல்லூரிக்கு நன்கொடையாக வழங்கி உள்ளனர். (இ)

புலிகளின் குரல் வானொலியில்

14 — 03 — 1995

செவ்வாய் இரவு

- ★ 8-02 — ஊர்சுற்றும் ஒலிவாங்கி
- ★ 8-10 — அறிந்துகொள்ளுங்கள்—தகவற்களஞ்சியம்
- ★ 8-20 — நலந்தானா?—''மிக்ரெயின்'' எனப்படும் கடுமையான தலைவலி பற்றி வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் ஆலோசனை
- ★ 8-30—செய்திகள்
- ★ 8-40— கருத்துக்களம்— இ.இராஜேஸ்வரன் எழுதிய ''புரிந்துணர்வு''
- ★ 8-50 — மலரும் மொட்டுக்கள்

15 — 03 — 1995

புதன் காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 —நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

தமிழீழ வானொலி

ஒலிபரப்பு

செவ்வாய் மாலை

- ★ 5 01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 புதியவை
- ★ 5-15 — தமிழிசை
- ★ 5 30 — வானொலி மதியூகம் — 11
- ★ 6-00— சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02—இவ்வாரம் இவர்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — என் நெரிவு

சித்திரத் தேர் வெள்ளோட்டம்

நல்லூர், மார்ச் 14

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் சிவன்கோயில் முருகப்பெருமானுக்கான புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

தேர்திருவிழா நாளை மறுதினம்வியாழன் காலை 8-30 மணிக்கும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும்.(ஒ-111)

திருமலைக்கு இளவரசி ஆன்

திருகோணமலை மார்ச் 14

இலங்கைக்கு தற்போது விஜயம் மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் இளவரசி ஆன் நேற்று முன்தினம் திருகோணமலைக்கு விஜயம் செய்து அங்குள்ள மீள் குடியேற்றக் கிராமங்களைப் பார்வையிட்டுள்ளார்.

உலக சிறுவர் ஸ்தாபனத்தின் உதவியுடன் அவர் திருகோணமலை சென்றிருந்தார்.

நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வந்திருந்த இளவரசி ஆன் நேற்று முன்தினம் இந்தியா புறப்பட்டுச் சென்றார் (ஒ-7)

புதன் தோறும் பற்சிகிச்சை

சண்டிலிப்பாய் மார்ச் 14

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலையில் செவ்வாய்க்கிழமை தோறும் நடத்தப்பட்டு வந்த பற்சிகிச்சைப்பிரிவு இம்மாதம் தொடக்கம் புதன் கிழமைகளில் நடைபெறுகிறது. (ஒ-135)

சிறுவருக்கான இலவச வைத்திய சேவை

கொழும்புத்துறை, மார்ச் 14

யாழ். நாயன்மார்கட்டு, சிவபரன் பாலர் பாடசாலை சிறார்களுக்கு இலவச வைத்திய சேவை ஒன்று அண்மையில் மேற்கொள்ளப்பட்டது.

வைத்திய கலாநிதி, வைத்திய ஜோதி திருமதி திலகவதி-கோபாலரத்தினத்தினால் நடத்தப்பட்ட இவ் வைத்திய சேவையின் போது, பல சிறார்களுக்கு இலவசமாக உயிர்ச்சத்து மாத்திரைகளும் வழங்கப்பட்டன.

சிறார்களின் பிற்கால வாழ்க்கையை உத்தேசித்து, தாய்மார் பிள்ளைகளின் போஷாக்கு உணவில் அக்கறை கொள்ள வேண்டும் என்றும் வைத்திய கலாநிதி அப்போது கேட்டுக் கொண்டார். (இ-5-30)

அகில இலங்கை கம்பன் கழகம்

யாழ்.

ஈஸ்வர பகவான்

நிறுவன

ஆதரவில் நடத்தும்

அமரர்கள்

வித்துவான் சி. ஆறுமுகம்

தேவன் - யாழ்ப்பாணம்

வித்துவான் சி. குமாரசாமி

ஆகியோர் ஞாபகார்த்த

கவிதை, பேச்சு, கட்டுரை போட்டிகள் - 1995

மேற்படி போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி 1995 மார்ச் 15 இலிருந்து 1995 மார்ச் 20 வரை நீடிக்கப்பட்டுள்ளது. பங்கு பற்ற விரும்பும் போட்டியாளர்கள் தங்கள் பெயர், முகவரி விபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவங்களை கீழ்க்கண்ட முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ குறித்த திகதியின் முன் சேர்ப்பிக்கவும்.

– ஆறு. திருமுருகன்
போட்டி இணைப்பாளர்

[சி-751]

வாசுதேவ பிரபாவின் சித்தப்பாவாம்; சிங்களப் பத்திரிகையின் இனவாதம்!

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சிகள் எடுக்கப்படும் போது—பண்டார நாயக்கா—செல்வநாயகம் ஒப்பந்தத்திலிருந்து இன்று வரை சிங்கள வகுப்புவாதிகள் வகுப்பு வாதத்தை வெவ்வேறு வடிவத்தில் கக்கினர்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையே நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைக்கு எதிராக 'திரிசூல' என்னும் சிங்கள இனவாதபத்திரிகையில் (5-3-95) வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் தமிழாக்கம் பிரசுரிக்கப்படுகிறது. இது உண்மை எவ்வாறு திரிக்கப்படுகின்றது; தென்னிலங்கையில குறைந்து வருவதாகக் கூறப்படும்இனவாதம் எவ்வாறுஅங்கு விதைக்கப்படுகிறது என்பதற்கு நல்லதோர் உதாரணம்

பூநகரி முகாமை முற்றிலுமாக அகற்ற வேண்டுமென புலிகள் அமைப்பு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இது தேசிய நோக்கில் மிகவும் முக்கியம் வாய்ந்த ஒரு கேள்வியாகும்.

பூநகரி என்பது தமிழ்நாட்டிலிருந்து வடபகுதிக்கு ஆயுதங்களைக்கொண்டு வருவதற்கான முக்கியமான வழியாகும். இந்த வழியை திறந்து வைப்பதற்குப் புலிகள் பல காலமாக எடுக்காத முயற்சிகள் இல்லை. பூநகரிப்பாதை புலிகளின் முக்கிய போர்க்களமாகும் மேலும் இப்பாதை புலிகளின் நடவடிக்கைகளுக்கு இருதயம் போல் விளங்குகிறது.

இராணுவ முகாமை பல மீற்றர் தூரம் பின்நோக்கி நகர்த்துவதில் கூடத் திருப்தியடையாத தமிழ்ப் புலிகள், இப்போது, அந்தப் பாதையைப் பூரணமாகத் திறந்து விடும்படி அரசிற்கு அழுத்தம் கொடுக்கிறார்கள். இந்தக்கோரிக்கையைஅரசு நிறைவேற்றும்என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

புலிகள் அமைப்புக்கு இந்தக் கோரிக்கையை விடுவதற்கான தைரியம் பிரபாகரனின் சித்தப்பாவான வாசுதேவாவின் வடபகுதி விஜயத்தின் பின்னரே உருவானது. இந்த ஆயிரமாயிரம் ஆறுகள் சங்கமித்தாலும் திருப்தியடையாத சமுத்திரம் போன்றவர்கள் புலிகள். எவ்வளவு கொடுத்தாலும் அவர்கள் திருப்தியடையப் போவதில்லை. எமது அரசாங்கமும் புலிகளுடன் உண்டு உறவாடி இந்தத் திருட்டுத் திருமணத்திற்கு அம்மா, அப்பாவாக விளங்கத் தயாராயுள்ளது.

பூநகரி முகாமைப் பாதுகாத்து, புலிகள் விரட்டியடிக்கப்படும் வரை முழந்தாளில் நின்று போரிட்டவர்கள் எமது முப்படைகளைச் சேர்ந்த வீரர்களாவர். அவர்கள் அதற்காக இரத்த ஆறு அல்ல, இரத்த சமுத்திரமே ஓடினும் தயாராயிருந்தனர்.

அன்றிலிருந்து இன்றுவரை நாட்டிற்காக உயிரை அர்ப்பணித்த வீரமிகு சிப்பாய்களின் உறுதியான சக்தியை துட்டுக்காசாகக் கருதி அதிகமான வாய்ப்புக்களைத் தமிழ்ப் புலிகளுக்கு வழங்க அரசு முன்வந்திருக்கிறது. வடபகுதி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர அரசு எடுக்கும் பயங்கரமான ஒழுங்குகளை நாட்டுப்பற்றுள்ள அனைவரும் வெறுத்தொதுக்க வேண்டும்.

இன்று வடபகுதியிலுள்ள இராணுவ முகாம்களில் படைவீரர்கள் பொறுமையிழந்த நிலையிலேயே உள்ளனர். தங்களைத்தாக்கியவர்களை— தங்களைக் கொன்றவர்களை — அரசு மடியில் வைத்துப் பாலூட்டுவதைக் கண்டு அரசு மீது அவர்கள் ஆத்திரமடைந்துள்ளனர்.

இராணுவத்தினருக்கு ஏற்பட்டுள்ள ஆத்திரம் அரசுக்கு அனுகூலமாக அமையாது. முப்படைகளிலுமுள்ள நாட்டுப்பற்றுடையோர் சந்திரிகா அரசின் இவ்வாறான நடவடிக்கைகளுக்குத் தகுந்த பதிலளிக்கத் தயாராக உள்ளனர்.

வடபகுதியில் கடமையாற்றும் மூன்று பிரிகேடியர்கள் தற்போதே தமதுராஜினாமா கடிதங்களை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளதாக நாங்கள் அறிகிறோம். இவ்வாறு ராஜினாமாவைச் சமர்ப்பித்துள்ளவர்கள் நாட்டின் மீது, இனத்தின் மீது பற்றுள்ள படைத்தளபதிகளாவர். நாங்கள் எப்போதும் குறிப்பிடும் தேவாலஸ்களின் சதி நடவடிக்கைகளுக்கும் தேவைப்படுவது இதுவேயாகும். நாட்டுப்பற்றுள்ள இராணுவத்தினரைஓரங்கட்டிவிட்டு எஞ்சியுள்ள திட்டங்களை நிறைவேற்றுவது மிகவும் சுலபம்.

சந்திரிகா! நாட்டுமக்களுக்குப் பொய்யான வாக்குறுதிகளை அளித்துபின்னர் அம் மக்களை ஏமாற்றி அவர்களிடமிருந்து உன்னால் தப்பிக் கொள்ள முடிந்தாலும், முப்படைகளிலுமுள்ள நாட்டுப் பற்றாளர்களை (தேசபிரேமிகளை) ஏமாற்ற [illegible] வில் மாட்டிக்கொள்ளாதே!

★

உள்ளூராட்சி சபைகளின்

வட்டார எல்லைகளை நிர்ணயிக்க ஆணைக்குழு

உள்ளூராட்சி சபைகளுக்கான அடுத்த தேர்தல்களை தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில இல்லாமல் முன்பு நடந்தது போன்று வட்டாரரீதியில் நடத்தப்பட உத்தேசிக்கப் பட்டுள்ளதனால், வட்டாரங்களின் எல்லைகள் மீளநிர்ணயம் செய்யப்படவுள்ளன.

இதற்கென எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது. உள்ளூராட்சி அமைச்சர் அமரசிறி தொடங்கொட இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்

மாநகரசபைகள், நகரசபைகள், பிரதேசசபைகளின் வட்டாரங்களின் எல்லைகளை மீளநிர்ணயம் செய்யப்படவுள்ளதாகவும்—

இதற்கு கணிசமான கால இடைவெளி அவசியம் என்பதால் எதிர்வரும் ஜூனில் நடத்த வேண்டிய உள்ளூராட்சிசபைத் தேர்தல்களை ஒத்திவைக்க வேண்டியேற்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை ஜூனில் நடைபெறவேண்டிய உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை அரசு ஒத்திவைக்குமானால், அதனை ஆட்சேபித்து தாம் நீதிமன்றம் செல்லப்போவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். வடக்கு-கிழக்கு தவிர்ந்த நாட்டின் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகள் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் வசமுள்ளதும்—

இச்சபைகளுக்கான தேர்தல்கள் இறுதியாக 1991ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் திகதியிலேயே நடத்தப்பட்டன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.]எ-14]

யாழ். மாவட்டத்தில் இம்முறை

பாரிய நட்டமேற்படுத்திய உருளைக்கிழங்கு செய்கை

உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகளில் பலர் இம்முறை பெரும் நட்டங்களைச் சந்தித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

உரும்பிராய் வடக்குப்பகுதியில் 20 ஆயிரம் ரூபா செலவழித்து உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபட்ட விவசாயி ஒருவர், இம்முறை [illegible] உருளைக்கிழங்கை 200 ரூபாவுக்கு மட்டுமே விற்க முடிந்ததாகத் தெரிவித்துள்ளார்.

உருளைக்கிழங்குச் செய்கையில் போட்ட முதலீட்டைத் திரும்பப் பெற்றவர்கள் எவருமே இல்லை என்று சொல்லப்படுகிறது.

கருணைக்கிழங்கு அறுவடையும் தற்போது நடைபெற்று வருகிறது. இது உருளைக்கிழங்குச் செய்கையாளர்களைப் பாதித்தமைக்கு ஒரு காரணம் எனக் கூறப்படுகிறது. (எ-154)

31-ம் நாள் நினைவஞ்சலி



ரெஜினா (ரத்தினப்) தேவசகாயம்

தோற்றம்: 08-01-1914
மறைவு: 12-02-1995

கல்லறையில் உன்னை வைத்துக்
கண்ணீரால் நனைத்திட்டோம்!
உலகிலே வைத்து இயலாமல்
உள்ளத்தில் வைத்து உருகிறோம்!!

எம்மை ஆறாத்துயரில் விட்டுச்சென்ற அன்புத் தெய்வமே! மாதம் ஒன்று முடிந்தும் எம் துயர் தீரவில்லை. மண்ணில் மறைந்து விண்ணில் புகுந்தனையோ! உன் முகம் மறப்பதெப்போ! எம் முன் என்றுமே தோன்றுகிறாய்,

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

இல. 21, பிரதிபன் வீதி,
கண்டிக்குளி,
யாழ்ப்பாணம்

(35658)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

கார் விற்பனைக்கு

Ford Prefect 150-E Model விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும்: இல. 82, இந்துக் கல்லூரி லேன், யாழ்ப்பாணம். [35655)

விற்பனையாகின்றது

விற்பனையாகின்றது. புதிய வெளியீடுகள் புதிய பாடத் திட்டத்திற்கானது நாமும் சுற்றாடலும் ஆண்டு - 2 தமிழ்மொழி ஆண்டு 1 - 2 (செயல் நூல்) தமிழ் மொழி மொழித் தேர்ச்சியும், இலக்கணமும் ஆண்டு 9, 10, 11 G. C. E. (O/L) தமிழ்மொழி அடிப்படை அறிவும் பயிற்சிகளும் ஆண்டு 6, 7, 8, 9, 10, 11 வெளியீடு. கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். [8373]

விற்பனையாகின்றது. புதிய வெளியீடுகள் புதிய பாடத்திட்டத்திற்கானது. புதிய விஞ்ஞானம் பாடப் பொழிப்பும், தொழிற்பாடும் பயிற்சிகளும் ஆண்டு 6, 7, 8, 9, 10, 11 புதிய சமூகக்கல்வி பாடப் பொழிப்பும், தொழிற்பாடும் பயிற்சிகளும் ஆண்டு 6 7, 8, 9, 10, 11 வெளியீடு. கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். [8374]

[illegible]

T. V. அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல், T V டெக், றேடியோ, மணிக்கூடுகள் திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டீச்காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ். 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். இணை, கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-396]

புலமைப்பரிசில

மேற்படி பரீட்சைக்கான பொது அறிவு, மொழித்திறன் வெளிவந்து விட்டது. 60/- மட்டுமே. சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். அறிவகம் புத்தகசாலை, வெலிங்டன் சந்தி, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி-619)

வரலாறு - 6, 7

வரலாறும் சமூகக்கல்வியும் செயல் நூல் ஆண்டு - 6, 7 விற்பனையாகிறது. [திருத்திய 3ஆம் பதிப்பு] ஆண்டிறுதி தவணைப்பரீட்சைகளுக்கு ஏற்றது. ஆக்கம்: N. Mylvaganam, குரு வெளியீடு. (35661)

மணப்பெண் தேவை

34 வயது, B Sc. ஆசிரியருக்கு தகுந்த பெண் தேவை. எம்மிடம் பல மணமக்கள் உண்டு. விவரங்களுக்கு தொடர்பு: கடிதமூலம்/நேரில் சி. நடராசா, (Retired Forest Offices, உரும்பிராய்) [35662]

அறிவியல் கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு, மார்ச் 14

வலிகாமம் தெற்கு பிரதேச சபையும் அதன் சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடத்தும் முழு நிலா கருத்தரங்கு எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு சுன்னாகம் பெரிய மதவடி பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாண மாவட்ட பனை அபிவிருத்தி சபை பதில் பொது முகாமையாளர் திரு. எஸ். சசிகிருஷ்ண மூர்த்தி "கலை நோக்கில் திரைப் படங்கள்" என்ற விடயம் பற்றி கருத்துரை வழங்குவார். (ஐ-152)

விற்பனையாகிறது!

வரலாறும் சமூகக்கல்வியும்

ஆண்டு — 8
பயிற்சிகள்
(விடைகளுடன்)
(திருத்திய பதிப்பு)

இளநிலைக் கல்வித் தேர்வு, தவணைப் பரீட்சைகளுக்கு ஏற்றது.
யாழ்ப்பாண இராச்சியம் முக்கியமளிக்கப்பட்டுள்ளது.

ஆக்கம்: **N. MYLVAGANAM**
St. John's College.

(35660)

யாழ். மத்திய கல்லூரி

பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களுக்கு

மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பிரேரணைகள் ஏதேனும் சமர்ப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 31 03-95இற்கு முன்பாக கீழ்வரும் முகவரியில் சமர்ப்பிக்கவும்.

என். இராஜதேவன்,
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்
ஏ பவர் அன் கொ. லிட்,
51, அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.

பழைய மாணவர் சங்கம்,
யாழ். மத்திய கல்லூரி.

13-03-95. (35666)

உ

கச்சியப்பர் குருபூசை

இவ்வைபவம் சிறக்க உதவிய சகலருக்கும் எமது மனமார்ந்த நன்றி.

டாக்டர் நா. கனகரத்தினம்
சபைத் தலைவர்

(35671)

உ

யாழ். சுண்டிக்குளி
கொய்யாத்தோட்டம்
ஸ்ரீ ஞான செல்வ விநாயகப்
பெருமான்

மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

யாழ். சுண்டிக்குளி கொய்யாத்தோட்டம்
ஸ்ரீ ஞான செல்வ விநாயகப் பெருமானுக்கும்
ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும்
பவ வருடம் பங்குனி மூன்றாம் நாள்
17 - 03 - 1995 வெள்ளிக்கிழமை உத்தர நன்னாளில்
மகா கும்பாபிஷேகம்
நடைபெறும்.

கர்மாரம்பம் — **15 - 03 - 1995** புதன் காலை 6-30 மணி

எண்ணெய்க் காப்பு — **16 - 03 - 1995** வியாழன் காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை

மகா கும்பாபிஷேகம் — **17 - 03 - 1995** வெள்ளி காலை 6-30 தொடக்கம் 7-56 மணிக்குள் வரும் சுப முகூர்த்தத்தில் நடைபெறும்.

★ அருளாசியுரை
மறைதிரு ஸ்கந்த சாம்பசிவசிவாச்சாரியார்
★ சர்வபோதகம்
சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்
(இணுவில்)
★ பிரதான குரு
சிவஸ்ரீ கு. குகேஸ்வரக் குருக்கள்
(நீர்கொழும்பு)
★ சர்வசாதகம்
சிவஸ்ரீ சாம். ஜெகதீஸ்வரக் குருக்கள்
(நாயன்மார்கட்டு)
★ கோயில் அர்ச்சகர்
பிரம்மஸ்ரீ பா. வசந்த சர்மா (அரியாலை)
★ கோயில் குருக்கள்
சிவஸ்ரீ பா. ரவீந்திரக் குருக்கள் (அரியாலை)

அனைவரையும் பங்கு கொண்டு
அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்:
தேவஸ்தான பரிபாலன சபையினர்,
கொய்யாத் தோட்டம்.

[35659]

உ

புங்குடுதீவு – கிழக்கு

கலட்டி - ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

✶ நாளை **15-3-95** புதன்கிழமை ✶
கலட்டி விநாயகன்
தேர்மீதேறி - திருத்தெருக்கள் பார்த்து -
அன்பர்களுக்கு அருள்மழை பொழியும்
ஒப்பற்ற

★ தேர்த் திருவிழாத் திருநாள் ★

இந்த நாளை
விடியலுக்கான நம்பிக்கையுடன் -கண்ணீர் சோர
நினைவு கூருகின்றோம்!

கா. மதியாபரணம் ஜே. பி.
ஆலய அறங்காவலர்

சு. கருணாகரன்
தலைவர்

பொன். ஐயாத்துரை சிவசாமி
பொதுச் செயலாளர்

— தேவஸ்தான பரிபாலனசபை

பிரசுர அன்பளிப்பு:
திருமதி நாகனாதர் இராசம்மா
10ஆம் வட்டாரம், புங்குடுதீவு

(35663)

உ

ஊரெழு கிளானைப்பதி
பர்வதவர்த்தினி அம்பாள் ஆலய

புதிய நிர்வாக சபை

05-03-95அன்று நடைபெற்ற, மேற்படி ஆலயப் பொதுச்சபைக் கூட்டத்தின் போது பின்வருவோர் புதிய நிருவாக சபை உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர் என்பதைப் பொதுமக்களுக்கு அறியத்தருகிறோம்.

தலைவர்	திரு. து. தயாபரன்
உப தலைவர்	திரு. மு. வீரசிங்கம்
செயலாளர்	திரு. இ. இளங்கோ
உபசெயலாளர்	திரு. ப. இராசேந்திரம்
பொருளாளர்	திருமதி கே. பரமசிவம்

நிருவாக சபை உறுப்பினர்கள்!

இ. சற்குணதாஸ் இ. சாண்டீபன்
இ. துரைசிங்கம் க. இரகுபரன்
அ. அமிர்தயோகன் ச. மார்க்கண்டு

நன்றி:

து. தயாபரன்
தலைவர்.

சி. இளங்கோ
செயலாளர்.

(35669)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

நடத்தும்

உற்பத்தி எழுச்சி வாரம் - 1995

★ உற்பதிக்கு கௌரவிப்பு
★ உற்பத்தித திறனுக்கு உன்னத பரிசில்கள்
★ உற்பத்தியாளருக்கு ஊக்கம்
★ ஆண்டு தோறும் தொடர்வது இந்நிகழ்வு

காலம் 1995 சித்திரை 24 ஆம் நாள் முதல் 30 ஆம் நாள் வரை

மாவட்ட ரீதியாக நடைபெறும் போட்டிகள்

விவசாயப் போட்டிகள்

நிலம் உழுதல்
துலா மிதித்தல்
நிலம் கொத்துதல்
மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

பனை, தென்னை வள அபிவிருத்தி தொடர்பான போட்டிகள்

குட்டான் இழைத்தல்
பனை மரம் ஏறுதல்
கிடுகு பின்னுதல்
கூடிய பதனீர் உற்பத்தியாளர் தெரிவுப்போட்டி

கடல்வள போட்டிகள்

நீச்சல்
பாய்மரம் ஓட்டுதல்
தண்டு வலிததல்
துடுப்பு வலித்தல்
வலை பின்னுதல்

சிறு கைத்தொழில் போட்டிகள்

கயிறு முறுக்குதல்
ஈர்க்குக்கட்டு கட்டுதல்
தும்புத்தடி கட்டுதல்

பொதுவான போட்டிகள்

வீதி திருத்துதல்
வாய்க்கால் திருத்துதல்
குளம் புனரமைப்பு

விண்ணப்ப முடிவு திகதி:- **01 - 04 - 1995** போட்டிகள் யாவும் **10-04-1995** ஆம் திகதி ஆரம்பமாகும்.

போட்டி விதிகளையும், விண்ணப்பப் படிவங்களையும் உங்கள் பகுதி கிராமிய உற்பத்திக் குழுக்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

★ தொழில் சிறக்கும், தமிழீழம் பிறக்கும் ★

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
அரசியல் துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழம்.

[சி-752]

உதயன்
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

வேகம் தேவை

டென்மார்க்கில் நடைபெற்று முடிந்த சமூக அபிவிருத்திக்கான சர்வதேச உச்சி மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, தமது அரசாங்கத்தின் சமாதான முயற்சியை குறிப்பிடத் தவறவில்லை.

அரசாங்கம் முன்னெடுத்துள்ள சமாதான முயற்சி வெளிநாடுகளுக்குத் திருப்தி அளித்துள்ளதாகவும், அது குறித்து அவை நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் தாமே மதிப்புரை கூறி, உச்சி மாநாட்டில் பங்குபற்றிய 120க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்களை தம் வசப்படுத்த முயன்றிருக்கிறார்!

ஒருவரின் செயல் மீது, திறமை மீது, ஆற்றல் மீது அடுத்தவர் நம்பிக்கை கொள்கிறாரா இல்லையா என்பதனை இரண்டாமவரே, மதிப்பீடு செய்து அவரே கூற வேண்டும். முதலாமவர் தம் மீது அடுத்தவர் நம்பிக்கை கொண்டுள்ளார் என்று இரண்டாமவரிடமே கூறுவது அவரைத் தமக்கு ஆதரவாளராக்குவதற்கே ஆகும்.

இந்தத் தந்திரத்தையே சந்திரிகாவும் கொப்பன்ஹேகனில் கையாண்டுள்ளார். தமது உரையை வெகுகவர்ச்சிகரமாக அமைத்திருக்கிறார்; ஆற்றியிருக்கிறார்.

அவரது பேச்சைச் செவிமடுத்த உலகத் தலைவர்கள் பலரும், சமாதான முயற்சி கணிசமான அளவு முன்னேறியிருப்பதாகவே கருதுவர்; நம்புவர். ஆனால் சமாதான முயற்சி திக்குத்திசை தெரியாத நிலையில் தடங்கலுற்று நிற்பதுதான் உண்மை!

பாவம் சந்திரிகா! உண்மைக்குப் புறம்பான நிலையைக் காட்டினால்தான் அவருக்கு வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும்.

சமாதான முயற்சி ஆமை வேகத்தில்கூட அன்றி, நத்தை வேகத்திலேயே நகருகிறது என்பதனை அதே மாநாட்டில் வைத்தே விடுதலைப் புலிகள் உலக நாட்டுப் பிரதிநிதிகளுக்கு வழங்கிய அறிக்கை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. அதனால் சந்திரிகா எதிர்பார்க்கும் வெளிநாடுகளின் நம்பிக்கை அவருக்கு இலகுவில் கிடைத்துவிடாது.

மேலும்—

சமாதான முயற்சி தடைப்பட்டு நிற்கிறது என்பதனையும் அதற்கு அரசாங்கமே காரணம் என்பதனையும் விடுதலைப் புலிகளின் அறிக்கை உலகத் தலைவர்களுக்கு எடுத்துச் சொல்கிறது.

சமாதான முயற்சியில் முன்னேற்றம் காணப்படாமல் இருப்பதற்கு விடுதலைப் புலிகளே காரணம் என்றவாறும், புதிது புதிதாக அவர்கள் நிபந்தனைகளை விதித்து வருவதாகவும் ஒரு தோற்றத்தைத் தனது பிரசார தந்திரத்தினால் அரசு உருவாக்கியுள்ளது.

சமாதான முயற்சியைத் துரிதப்படுத்தும்படி அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு விடுதலைப் புலிகள் உலகத் தலைவர்களிடம் கேட்டிருப்பதால், சமாதான முயற்சியில் ஏற்பட்ட தடங்கலுக்கு அரசாங்கமே காரணம் என்பதனை அவர்கள் இலகுவில் கிரகித்துக்கொள்வர்.

பேச்சுவார்த்தைகளில் உண்டான தடங்கலுக்கு உண்மையான காரணம் அரசாங்கத்தின் செயற்பாடுகளும், அணுகு முறை மாற்றமுமே என்பதனை உலகத்துக்கு மட்டுமன்றி தென்னிலங்கை மக்களுக்கும், பிரமுகர்களுக்கும் விளங்கப்படுத்தட்பட வேண்டும்.

தாமதம், இழுத்தடிப்பு என்பனவற்றுக்கு அரசாங்கமே காரணம் என்பதனைப் புரிந்துகொண்டு தெற்குப் பிரமுகர்களும், சமாதான முயற்சியை துரிதப்படுத்துமாறு அரசாங்கத்துக்கே அழுத்தம் கொடுக்கவேண்டும். யாழ்ப்பாணம் சென்று தடங்கலை நீக்க விடுதலைப் புலிகளுடன் பேசப்போகிறோம் என்று கூறுவதற்கான தேவை இல்லை. பந்தை நேராகவும், வேகமாகவும் அடிக்கவேண்டியது அரசாங்கமே.

இனப்பிரச்சினை விவகாரத்தை— சமாதான முயற்சியை — வெளிநாட்டுக் கடன் பெறுவதற்கான தளமாக அரசு பயன்படுத்த உடந்தையாக அல்லது ஆதரவாக இருக்க எவரும் முயலக்கூடாது!

15ஆயிரத்து 967 மீனவ குடும்பங்கள் மட்டக்களப்பில் உடைமைகள் இழப்பு

மட்டக்களப்பு, மார்ச் 14

நாட்டில் நிலவும் வன்செயல்கள் காரணமாக மட்டக்களப்பில் மட்டும் 15 ஆயிரத்து 967 மீனவக் குடும்பங்கள் தமது தொழில்உடைமைகளை இழந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இராணுவ நடவடிக்கைகளினால் தமது தொழில் உடைமையை இழந்த இம்மீனவர்கள் — கடந்த பல வருடங்களாக கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

மட்டக்களப்பு வாவியில் மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் சுமார் 10 ஆயிரத்து 650 மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இக்குடும்பங்களுக்கு இதுவரை எதுவித இழப்பீட்டு நிவாரணங்களும் வழங்கப்படவில்லை. [ஐ-5]

உலகத் தலைவர்கள் பலருடன் டென்மார்க்கில் சந்திரிகா பேச்சு

வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கு உதவ அவர்கள் உறுதி

கொழும்பு, மார்ச் 14

டென்மார்க் தலைநகர் ஹொப்பன்ஹேகனில் சமூக அபிவிருத்தி உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அங்கு உலக நாடுகள் பலவற்றின் தலைவர்களைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது.

இலங்கையில் நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்கும், வட-கிழக்கு பிரச்சினைகளை தீர்விற்கு கொண்டு வரவும் எடுக்கப்பட்ட முயற்சிகள் குறித்து உலகத் தலைவர்கள் ஜனாதிபதிக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

வடக்கு — கிழக்கில் புனர்வாழ்வு, புனர்நிர்மாண வேலைகளுக்குத் தேவையான எந்த உதவியையும் தாம் வழங்குவதாக அவர்கள் ஜனாதிபதியிடம் உறுதியளித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலேசிய பிரதம மந்திரி, பாகிஸ்தான் ஜனாதிபதி, தென்கொரிய ஜனாதிபதி, ஒல்லாந்து அபிவிருத்தி ஒத்துழைப்புத்துறை அமைச்சர் ஆகியோர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியபோது குறிப்பிட்ட சில திட்டங்களுக்கு உதவியளிப்பதாக உறுதியளித்துள்ளனர்.

டென்மார்க் பிரதம மந்திரி அளித்த மதிய போசன விருந்தின் போதும் டென்மார்க் மகாராணி அளித்த இராப்போசன விருந்தின் போதும், தென்னாபிரிக்க ஜனாதிபதி, கியூபா ஜனாதிபதி, பிரெஞ்சு ஜனாதிபதி ஆகியோருடனும் இலங்கை ஜனாதிபதி உத்தியோகப் பற்றற்ற முறையில் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது, இலங்கையில் நாடாளுமன்ற ஜனநாயகத்தை பலப்படுத்த அரசு கடைப்பிடித்து வரும் கொள்கைகளை விளக்கிக் கூறினார்.

ஜனநாயக மயப்படுத்துதல் நல்லாட்சி, ஒளிவு மறைவின்மை, மனித உரிமைகளைப் பேணுதல் போன்ற அம்சங்களை தமது அரசு முக்கிய கொள்கைகளாகக் கொண்டுள்ளதாக ஜனாதிபதி கூறினார். (ஐ-5)

ஆணைக்குழு விசாரணை ஆரம்பம்

கொழும்பு சிறைச்சாலையில் கடந்த வாரம் நடைபெற்ற மோதல்கள் தொடர்பாக விசாரிப்பதற்கான தனிநபர் ஆணைக்குழு நேற்று அதன் விசாரணைகளை ஆரம்பித்தது.

குழுவின் ஆணையாளர் திரு. யோ. மாப்பனா, நேற்றுக் காலை வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்தார்.

பொலீஸாரின் உதவியும் இவ்விடயத்தில் நாடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசின் வெளிநாட்டுக் கொள்கை முதலீட்டாளர்களைக் கவரவில்லை

பொருளாதார நிபுணர்கள் கருத்து

''அரசின் வெளிநாட்டுக் கொள்கை எதிர்பார்த்த அளவு வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவரவில்லை''

கொழும்பில் உள்ள பொருளாதார நிபுணர்கள் இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கக் கூடிய ஒருசில புதிய நடைமுறைகள் அரசின் பொருளாதாரக் கொள்கையில் இடம் பெற்றுள்ளன எனினும் அவை தெளிவானவையாக இல்லை.

வழங்கப்பட்டுள்ள சலுகைகள் பல வெளித்தோற்றத்திற்கே நன்றாக உள்ளன. ஆனால் உள்ளே நெருக்கமான கட்டுப்பாடுகளைக் கொண்டதாக அவை காணப்படுகின்றன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அரசின் சமாதான முயற்சிகள் நிரந்தரமானவையாக இல்லாததினால் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வருகை மந்தகதியிலேயே உள்ளதாக முதலீட்டு மையங்களில் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)

இராணுவ முகாம்கள் மூடப்பட்டால்

ஆதரவற்றோர் இல்லங்கள் தேவையற்றவையாகி விடும்

கொடிவார நிகழ்வில் உரை

கைதடி, மார்ச் 14

எமது வாழ்வியக்கத்துக்கு ஆத்மபலத்தை வழங்குவது வழிபாட்டுத் தலங்களே. ஆனால் இன்று இந்த வழிபாட்டுத்தலங்கள் இராணுவ முகாம்களாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த இராணுவ முகாம்கள் மூடப்படும்போது ஆதரவற்றோர் இல்லங்கள். தேவையற்றனவாகி விடும்.

இவ்வாறு கடந்த 10 ஆம் திகதி கைதடி சைவச்சிறுவர் இல்ல மண்டபத்தில் நடைபெற்ற இந்துசமயப் பேரவையின் கொடிவார ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு வரவேற்புரை நிகழ்த்திய இந்துசமயப் பேரவையின் செயலாளர் திரு சக்திகிரீவன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில், இந்துக்களின் புனித ஸ்தலமான திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் போன்ற ஆலயங்களிலும் அவற்றை அண்டிய குடியிருப்புகளிலும் இராணுவம் அநாவசியமாகக் குடிகொண்டுள்ளது. இதனால் தமிழீழத்தில் ஆதரவற்றோர் இல்லங்களும் அநாதைகளைப் பேணும் நிலையங்களும் பெருகிக்கொண்டே செல்கின்றன.

தமிழர் பிரச்சினைக்கு ஓர் உண்மையான — உளப்பூர்வமான — தீர்வு ஏற்படவேண்டுமானால், அர்த்தமற்ற முறையில் திறக்கப்பட்டுள்ள அனைத்து இராணுவ முகாம்களையும் மூடிவிட்டு புலிகளுடன் அரசு உண்மையாகப் பேசவேண்டும் என்பதே எமது கொடிவாரச் செய்தி. இதனை இங்கு வந்துள்ள அரச அதிபர் ஜனாதிபதிக்குத் தெரிவிக்க வேண்டும்— என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் அங்கு ஆசியுரை வழங்குகையில், ஆதரவற்றவர்களுக்கு உதவவென்று இந்துசமயப்பேரவை ஒழுங்கு செய்துள்ள இக்கொடிவாரமானது எமக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும். நாம் கொடுக்கும் ஒவ்வொரு சதமும் இப்பிள்ளைகளின் எதிர்கால வாழ்வுக்கு வழி அமைக்கும்.

இப்பிள்ளைகளுக்காக செலவிடப்படும் பணம் இவர்களை உணர்ச்சி உள்ளவர்களாக, சிறந்த மொழிப்பற்றுள்ளவர்களாக, சிறந்த நாட்டுப் பற்றுள்ளவர்களாக சிறந்த சமயப்பற்றுள்ளவர்களாக வளர்த்தெடுக்கும் என்பதில் ஐயமில்லை— என்றார்.

கொடிவாரத்தைதொடக்கிவைத்துப் பேசிய யாழ் அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம், பேரவையால் எனக்கு விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோளை நிறைவேற்றுவதன் பொருட்டு ஜனாதிபதியையும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களையும் உயர் அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தி பேரவைச் செய்தியை அவர்களிடம் கொடுப்பேன்.

நான் 1983ஆம் ஆண்டிலிருந்து அரச அதிபராகக் கடமையாற்றி வருகிறேன். இக்காலங்களில் [illegible] வான சிறார்கள் உருவாகி வருவது அதி[illegible]ளது.

இவர்களின் எதிர்கால வாழ்வுக்காக இதுமாதிரியான இல்லங்கள் உருவாக்கப்படுவது இன்றியமையாததாகின்றது. இந்தப் பெருங்குறையின் ஒரு பகுதியை இச்சைவச் சிறுவர் இல்லம் நிறைவேற்றி உள்ளது என்றார்.

யாழ். மாநகர ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் அங்கு உரையாற்றும்போது, இக்குழந்தைகள் அநாதைகளல்ல. நாம் அனைவருமே இறைவனின் குழந்தைகள். அநாதைகளென்று உருவாகும்போது அதற்கு இச்சமூகமே பொறுப்பு நிற்கிறது.

நாம் அனைவரும் அநாவசியச் செலவுகளைக் குறைத்துக்கொண்டு இந்த வகையான பணிகளுக்கென செலவிட வேண்டுமென்ற செய்தி இச்சமூகத்திலுள்ள சகல மட்டங்களையும் சென்றடைய வேண்டும் என்று—தெரிவித்தார்.

முன்னதாக இந்நிகழ்வை யாழ். றோட்டறிக் கழகத் தலைவர் திரு. ஈ. சரவணபவனும் மில்க்வைற் தொழிலதிபர் கலாநிதி கனகராசாவும் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். இந்துப் பேரவையின் கொடியை யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் ஏற்றினார்.

கொடிவார ஆரம்ப நிகழ்வுகள் ஆத்மஜோதி நா. முத்தையா தலைமையில் நடைபெற்றன.

மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள், பேராசிரியர் அ. சண்முகதாஸ் உட்பட பலர் இதில் உரையாற்றினர்.

[illegible] யாழ். அரச அதிபர் [illegible] (ஒ-7)

பாதிக்கப்பட்ட காரைநகர் மக்கள் விவரம் திரட்டல்

யாழ்ப்பாணம், மார்ச் 14

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட மக்களில் காரைநகர்ப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கான பாதிப்புற்றோர் விவரம் தற்போது திரட்டப்பட்டுவருகிறது.

17ஆம் திகதிவரை இல.65, புதிய வீதி, அத்தியடியில் உள்ள இ. பெ. நிவக மக்கள் நலன் காக்கும் கழகத்தில் பதிவுகள் இடம்பெறும்.

இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் அனைவரும் தமது குடும்ப அட்டையுடன் சமூகம் தந்து தமது பாதிப்பு விவரங்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

மேலும் இப்பகுதியைச் சேர்ந்த இடம் பெயர்ந்து குடியிருப்புகளில் வாழும் மக்களினது பாதிப்பு விவரங்கள், பின்னர் திகதி அறிவிக்கப்பட்டு பதிவு செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

றேகனுக்கு மூளைவியாதி

வாஷிங்டன், மார்ச் 14

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி றொனால்ட்றேகன் அல்ஸிமேரீஸ் என்னும் மூளை நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார்.

84 வயதான றேகன் படிப்படியாகமறதி, மாறாட்டம் போன்ற உடல்நிலை சீர்கேடுகளை ஏற்படுத்தும் இந்த மூளை நோயினால் பாதிக்கப்பட்டது கடந்த நவம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையிலிருந்துதெரிய வந்துள்ளது.

அமெரிக்கர்களில் மூன்றிலொரு பகுதியினருக்கு 85 வயதின் பின்னர் இந்த நோயின் பாதிப்பு ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர்களில் மிகவும் வயது கூடியவராக றேகனே 1981 ஆம் ஆண்டு முதல் 1989 வரை பதவியிலிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

ஐ. தே. கவின் 17ஆண்டு ஆட்சியில்

74 ஆயிரம் வீடுகள் மட்டுமே அமைக்கப்பட்டன

வீடமைப்பு அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 14

ஐ. தே. கட்சியின் ஆட்சிக் காலத்தில் ஒரு லட்சம் வீடுகள் அமைக்கும் திட்டம், 10 லட்சம் வீடுகள் அமைக்கும் திட்டம், 15 லட்சம் வீடுகள் அமைக்கும் திட்டமென பெருமளவில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் உண்மையில் 1993 இறுதிவரை அமைக்கப்பட்ட வீடுகள் 74 ஆயிரத்து 242 மாத்திரமே.

வீடமைப்பு அமைச்சர் சிறிபால டி சில்வா இவ்வாறு தெரிவித்ததாக 'யுக்திய' என்னும் சிங்கள வார இதழ் தெரிவிக்கிறது.

10 லட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் 3லட்சத்து 13 ஆயிரத்து 448 பேருக்கு தலா 5 ஆயிரத்து 500 ரூபா கடன் வழங்கியது மாத்திரமே இடம்பெற்றதாகவும்—

15 லட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழே 3 லட்சத்து 30 ஆயிரத்து 927 பேருக்கு தலா பத்தாயிரம் ரூபா கடன் வழங்கப்பட்டது மாத்திரமே இடம்பெற்றதாகவும் அமைச்சர் தெரிவித்தார். [இ-10]

கடும் வெப்பத்தின் பாதிப்பு:

குடாநாட்டில் தீவிரமாக பரவும் தொற்று நோய்கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 14

யாழ், குடாநாட்டில் கடும் வரட்சி நிலவி வருவதால் வெப்பம் சம்பந்தமான தொற்று நோய்கள் மிக வேகமாகப் பரவி வருகின்றன.

கொப்பளிப்பான் கூகைகட்டு, கண்நோய் மற்றும் மலேரியாக்காய்ச்சல் போன்ற நோய்களால் ஏராளமானோர் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இந்நோய்களால் பாதிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையானோர் யாழ். ஆஸ்பத்திரிக்கு தினமும் படை எடுப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. [ஒ-17]

காய்ச்சலால் பீடிக்கப்பட்டு

பளை ஆஸ்பத்திரியில் நிரம்பி வழியும் நோயாளர்

ஒரு டாக்டர் மட்டுமே சேவையில்

தென்மராட்சி, மார்ச் 14

பளை வைத்தியசாலை வார்ட்டுகளில் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் நிரம்பி வழிகின்றனர். இங்கு தினமும் நானூறுக்கு மேற்பட்டோர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் இவ்வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருகின்ற போதும் ஒரேயொரு வைத்தியர் மட்டுமே கடமையாற்றுவதால் மாலை ஆறு மணிவரையும் அவர்கள் காத்திருந்து சிகிச்சை பெறவேண்டியுள்ளது.

இங்குள்ள வைத்தியரும் ஊழியர்களும் சிரமம் பாராது ஓய்வின்றி தொடர்ந்து சேவையில் ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

கட்டி இழுத்தவர் மீது டிராக்டர் ஏறியது!

ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில்

இயங்க மறுத்த உழவு இயந்திரத்தை, கயிறு கட்டி முன்பக்கமாக இழுத்து இயங்க வைக்க முயன்றவர் மீது அந்த உழவு இயந்திரம் ஏறியதால் அவர் ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புத்தூர் கிழக்கு பிள்ளையார் கோயில் வயற்பகுதியில் சனிக்கிழமை மாலை நடைபெற்ற சம்பவத்தில் காயமுற்றவர் அதே இடத்தைச் சேர்ந்த கந்தர் மகாலிங்கம் (48 வயது) ஆவார்.

வயலில் சூடு மிதித்து முடிந்த பின்னர் உழவு இயந்திரம் (டிராக்டர்) நிறுத்தப்பட்டது. அதன் பின்னர் பல அலுவல்களைக் கவனித்து விட்டு, அதனை இயக்க முயன்றபோது அது இயங்கவில்லை.

உழவு இயந்திரத்தில் கயிற்றைக் கட்டி முன்பக்கமாகச் சிலர் இழுக்க, பின்பக்கமாகச் சிலர் தள்ளினார்கள்.

உழவு இயந்திரம் 'ஸ்ராட்' ஆகி ஓடத் தொடங்கியது. அப்போது மகாலிங்கம் மண்மேடு ஒன்றில் தடக்கி விழுந்ததும் உழவு இயந்திரம் அவர் மீது ஏறியது.

சனிக்கிழமை இரவு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மகாலிங்கத்துக்கு நேற்று முன்தினம் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அவரது ஈரல் பழுதடைந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

அவர் ஆபத்தான நிலையில் உள்ளதால் நேற்று முன்தினம் பிற்பகல் முதல் சத்திர சிகிச்சை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டது. [அ-13]

யாழ். மாவட்ட திரிசாரணரின் தாபகர் தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ். மாவட்ட திரிசாரணர் குழுவினரால், 'தாபகர் தின விழா' கடந்த மாதம் 24 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். மத்திய கல்லூரியில் இவ்விழா நடைபெற்றது.

இவ்விழாவில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், வண. பிதா. அன்ரன் ராஜநாயகம், யாழ். மாவட்ட சாரணர்குழு ஆணையாளர் இ. மகேந்திரன், கலாநிதி குணராசா, மத்திய கல்லூரி அதிபர் திரு. சண்முகநாதபிள்ளை, மாவட்ட உதவி ஆணையாளர் திரு சு. ஏகாம்பரமூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-5-7)

போஷாக்கு மேம்பாட்டு கருத்தரங்கு

நவாலி மார்ச் 14

போஷாக்கு மேம்பாடு தொடர்பான கருத்தரங்கு ஒன்று ஆனைக்கோட்டையில் நடைபெற்றது.

கடந்த வாரம் நடைபெற்ற இக் கருத்தரங்கிற்கு'' குமரன் பாலர் பாடசாலை'' ஆசிரியை செல்வி அப்பையா இராசேஸ்வரி தலைமை வகித்தார்.

இக்கருத்தரங்கில் குழந்தைகளின் வளர்ச்சி, போஷாக்குக் குறைபாட்டு நோய்கள் மற்றும் சிக்கனமாக நிறை உணவு தயாரித்தல் ஆகியன பற்றி குடும்பநல சேவையாளர்கள், சுகாதார பரிசோதகர்கள் போன்றோர் கருத்துரைகளை வழங்கினர். [இ-5-100]

மயானத்தில் சிரமதானம்

வலிகாமம்தெற்கு பிரதேச அபிவிருத்தி சபை உடுவில் உப அலுவலகத்துக்கு உட்பட்ட பூவோடை இந்து மயானம் சிரமதானம் மூலம் அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டது.

பிரதேச செயலர் தலைமையில் பூவோடை இந்து மயான அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் சிரமதான பணிகளில் ஈடுபட்டதுடன், அங்குள்ள வைரவருக்கு விசேட பொங்கலும் வைத்து வணங்கினர். [ஒ-152]

பிராம்பத்தை சந்தி வரை பஸ் சேவை

பயணிகளினதும், பாடசாலை மாணவ மாணவிகளினதும் நலன்கருதி பிராம்பத்தைச் சந்திவரை சிற்றூர்தி சேவை நாளை புதன்கிழமை முதல் 788 பாதையால் நடைபெறவுள்ளது.

யாழ் பஸ் நிலையத்திலிருந்து காலை 7-00 மணிக்கு புறப்பட்டுச் செல்லும் மூளாய் சேவை சிற்றூர்தியும் நண்பகல் 1-30 மணிக்கு மூளாயிலிருந்து யாழ். வரும் சிற்றூர்தியும் பிராம்பத்தை சந்திவரை சென்று அங்கிருந்து திரும்பவும் சண்டிலிப்பாய்ச் சந்தி ஊடாக வழமையான சேவையில் ஈடுபடும் என அறிவிக்கப்படுகிறது.

அதிபர்கள் ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு

தெல்லிப்பளைக் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இன்று பிற்பகல் 2 மணிக்கு மருதனார் மடத்தில் உள்ள மகாஜனக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தமிழீழ அரசியல் துறைப் பிரமுகர்கள் அதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஜெயவர்த்தன பல்கலைக்கழகம் திறக்கப்படும்

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் இம் மாதம் 23 ஆம் திகதி மருத்துவம், விஞ்ஞானம், முகாமைத்துவப்பீட பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மாத்திரம் திறக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை 17ஆம்திகதி தொடக்கம், மாணவர்கள் அங்கு செல்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

பல்கலைக்கழகம் மூடப்படுவதற்கு முன்னர், பல்கலைக்கழக விடுதிகளில் வசித்து வந்த மாணவர்கள் இம்மாதம் 17ஆம் திகதிக்கு முன்னர், தமது உடைமைகளை வெளியேற்ற வேண்டும் என பல்கலைக்கழக உபவேந்தர் தெரிவித்துள்ளார். (இ-5)

மரண அறிவித்தல்கள்

ஆறுப்பிள்ளை வேலாயுதபிள்ளை

(வறுத்தலை விளான்)

வறுத்தலை விளானைச் சேர்ந்த ஆறுப்பிள்ளை வேலாயுதபிள்ளை 12-3-95ல் காலமானார். அன்னாரது ஈமக்கிரியைகள் 13-3-95 மாலை 3.30மணியளவில் கைதடி மயானத்தில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
வே. சந்திரன்
[மகன்]

கற்பகப்பிள்ளையார்
கோயில் அருகில்,
உடுவில் கிழக்கு.
[8385]

திருமதி
மீனலோசனா தேசிகநாதன்

திருநெல்வேலி தெற்கு, பலாலி வீதியைச் சேர்ந்த திருமதி மீனலோசனா தேசிகநாதன் அவர்கள்13-03-95 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சுப்பையா தேசிகநாதன் அவர்களின் அன்பு மனைவியும் சகிதா, பார்த்திபன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி வனிதா சிறிகாந்தா அவர்களின் சிறிய தாயாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
சகிதா
[மகள்]

''அயோத்தியா''
பலாலி வீதி.
திருநெல்வேலி தெற்கு.
யாழ்ப்பாணம்.
[35675]

தாமோதரம்பிள்ளை சிவபாதசுந்தரம்

(இளைப்பாறிய கிராமசேவையாளர், சந்தர்மடம்)

சந்தர்மடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சாவகச்சேரியை புகுந்த இடமாகக் கொண்டவருமான தாமோதரம்பிள்ளை சிவபாதசுந்தரம் 09 - 03 - 1995 காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி தாமோதரம்பிள்ளையின் அன்பு மகனும், திருமதி தெய்வீகராணி சிவபாதசுந்தரத்தின் (இளைப்பாறிய ஆசிரியை, றிபேக் கல்லூரி, சாவகச்சேரி) பாசமிகு கணவரும், ஏகபுதல்வி சியாமாவின் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி) அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற மெய்ஞானசுந்தரம் (இளைப்பாறிய சிறாப்பர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), திருமதி பராசக்தி காளிதாசன் ஆகியோரின் சகோதரரும், திரு. காளிதாசன், திருமதி செல்வரட்ணம் ராஜகோபால், காலஞ்சென்ற தர்மரட்ணம் (ஹொலண்ட்), சதாநந்தன் (U K), நிர்மலன் (கொழும்பு), சிறீதரன் (கொழும்பு), பாஸ்கரன் (கனடா), திருமதி ஜெயரஞ்சியதம் சண்முகராஜா (கொழும்பு), ரவீந்திரன் (சவுதி), கரிகரன் (பாறிஸ்) ஆகியோரின் அருமை மைத்துனரும், திருமதி சுகன்னி அன்பழகன், திருமதி ஜெயசிறி சிறீனிவாசன், விஷ்ணுதாசன், ர[illegible]தாசன் ஆகியோரின் அருமை மாமனாரும், கருணாநிதி, தயாநிதி (U K), கிருபாநிதி (கனடா) ஆகியோரின் சிறிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (14—03—1995) செவ்வாய் பகல் 11 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்களையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

தகவல்:
திருமதி தெ. சிவபாதசுந்தரம்
(மனைவி)

93/2. இந்துமகளிர் ஒழுங்கை,
சந்தர்மடம்
(35670)

திருமதி வல்லிபுரம் பொன்னம்மா

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது ஆனைக்கோட்டை உயரப்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வல்லிபுரம் பொன்னம்மா நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வல்லிபுரம் அவர்களின் அன்புமனைவியும், நவரட்ணம், சீதாதேவி, மனோன்மணி, செல்வமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், வடிவேல், மற்றும யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - நாகமுத்து தம்பதிகளின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு, பூரணம், இராசரட்ணம், மற்றும் நாகேஸ், அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-3-95) பி.ப. 3 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
பொ நாகேஸ்
(சகோதரன்)

இல. 122
உயரப்புலம் வராலி கோயிலுக்கு அருகில்
ஆனைக்கோட்டை
(35678)

V. K சின்னத்துரை

(பிரபல கமக்காரர்- கிளிநொச்சி)

காரைநகர், களபூமியை பிறப்பிடமாகவும், தற்சமயம், 45/4, ஸ்ரான்லி கல்லூரி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட V. K சின்னத்துரை அவர்கள் நேற்று (13-03-95) காலமாகிவிட்டார்.

அன்னார் அன்னப்பிள்ளையின் அன்புக்கணவரும், வசந்தராதேவி, நகுலேஸ்வரி, கலாவதி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், இராஜேந்திரா (S K), மகேந்திரம், சிவசுப்ரமணியம் (Siwss) ஆகியோரின் அன்புமாமனாரும், ராஜீவன், வாசுகி (ஹற்றன் நஷனல் வங்கி, கொழும்பு), உமாதர்ஷினி, காயித்திரி, சிவசங்கா, கார்த்திகா, சிந்துஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி கலாவதி சிவசுப்பிரமணியம்
(மகள்)

45/4, ஸ்ரான்லி கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்
(35672)

இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 262/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14 03 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

மன்னார் மடு தேவாலயத்துக்கு தெற்கிலிருந்து சமாதானக் குழு

கொழும்பு, மார்ச் 14

தேசிய நல்லிணக்க பதில் அமைச்சர் திரு. ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தலைமையில் சமாதானக் குழு ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை மன்னார் மடு தேவாலயத்துக்கு விஜயம் செய்யவுள்ளது.

ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட கம்பஹா மாவட்ட கிறிஸ்தவ மக்கள் பலரும் அந்தக் குழுவில் இடம் பெறவுள்ளனர்.

தமது பயணத்திற்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையில் பதில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஈடுபட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து தரைமார்க்கமாக மடுவுக்குச் செல்ல குழுவினர் திட்டமிட்டுள்ளனர். (ஐ-4)

ஆயிரம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நிலவும் கசப்புணர்வை நீக்கி சமாதான முயற்சிக்கு ஆதரவு தெரிவிப்பதே தமது விஜயத்தின் நோக்கமாகும் என்று பாத யாத்திரையில் கலந்து கொள்ளவுள்ள பௌத்த பிக்குகள் பலரும் தெரிவித்துள்ளனர். (ஐ-4]

புலிகளின்—

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை முற்றாக நீக்குதல்.

— ஆகிய நான்கு கோரிக்கைகளையே ஜனாதிபதி சந்திரிகா நிராகரித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகள் விடுத்த இந்தக் கோரிக்கைகளை, விடுதலைப் புலிகள் விதித்த நிபந்தனைகள் என்றே சந்திரிகா தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜனாதிபதி சந்திரிகா டென்மார்க் தலைநகர கொப்பன்ஹேகனில் நடைபெற்ற சமூக அபிவிருத்திக்கான உச்சி மாநாட்டில் பங்குபற்றுவதற்காக கொழும்பிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு வே. பிரபாகரனுக்கு அனுப்பிவைத்த நான்கு பக்கக் கடிதத்திலேயே அவர் இதுபற்றித் தெரிவித்திருக்கிறார்.

அக்கடிதத்தில் சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்திருந்த ஏனைய அம்சங்கள் வருமாறு:-

★ அடுத்த சுற்றுப் பேச்சுக்களை ஏப்ரல் 2 ஆம் திகதிக்கும் 10ஆம் திகதிக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு அரசுத் தரப்பு தயார்.

★ ஆரம்பத்தில் பேச்சுக்களை இரண்டு நாட்களுக்கு நடத்த முடியும்.

★ பேச்சுவார்த்தைக்கு புலிகள் தயாராகுவதற்கு வசதியாக அரச தரப்பு யோசனைகளை முன்கூட்டியே விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கவும் அரசு தயார்.

★ பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிக்க என்னால் பிரேரிக்கப்பட்ட— பிரான்ஸ் தேசத்து — ராஜதந்திரி எனக்கு நெருங்கிய நண்பர் என்பது தவறு. எனக்கு அவரைத் தெரியவே தெரியாது

பிரான்ஸ் அரசினால் நியமிக்கப்பட்டவரே அவர் என்பதை பெப்ரவரி 20 ஆம் திகதி திரு. பிரபாகரனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளேன்.

கொழும்பிற்கு வந்த போதே அவரை முதல் தடவையாகச் சந்தித்தேன்.

★ புலிகள் பேச்சுவார்த்தை பற்றிப் பேசினாலும் எதைப் பற்றிப் பேசுவது என்று எதையுமே குறிப்பிடவில்லை.

★ அரசியல் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு விரைவான ஒரு தினத்தைக் குறிப்பிடுமாறு நான் விடுத்த வேண்டுகோளுக்கு இதுவரை பதிலளிக்கப்படவில்லை.

★ பேச்சுவார்த்தைக்கு இணங்குவதற்குப் பதிலாக புலிகளினால் நான்கு நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன,

பூநகரி முகாமை அகற்றல், மீன்பிடித் தடை தளர்வு, கிழக்கில் புலிகள் ஆயுதபாணிகளாக நடமாட அனுமதித்தல், பொருளாதாரத் தடையை முற்றாக நீக்குதல்— ஆகியவையே அந்த நிபந்தனைகளாகும்.

ஒரு நீடித்த சமாதான வரைமுறைக்குப் புறம்பான இந்தக் கோரிக்கைக்கு இடமளிக்கப்பட்டால் இராணுவ ரீதியில் பாரதூரமான விளைவுகள் ஏற்படும். அரசாங்கம் தேசிய பந்தோபஸ்தை விட்டுக் கொடுக்காது. அரசு இதுவரை இயன்றவரை சலுகைகளை வழங்கியுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பான பேச்சுக்களும் அரசியல் பேச்சுக்களும் ஒரே நேரத்தில் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடாகும்.

— இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா தமது [illegible] தெரிவித்துள்ளதாக கொழும்புப் பத்திரிகைகள் [illegible] தன. (உ-4)

கல்வித்திணைக்களம் நெருக்குதல்:

பரீட்சை நெருங்கும் சமயம் பாடங்களை மாற்ற பணிப்பு

பயிலுநர் ஆசிரியர் திரிசங்கு நிலை

யாழ்ப்பாணம், மார்ச். 14

1990 ஆம் ஆண்டில் பயிலுநர் ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு — கணிசமான எண்ணிக்கையானோருக்கு — அவர்கள் தோற்ற வேண்டிய தொலைக் கல்வி பரீட்சைக்கு சில வாரங்களே இருக்கையில் —

பரீட்சைக்கு வேறு பாடத்துக்குத் தோற்றும்படி உயரதிகாரிகளால் பணிப்புரை விடுக்கப்பட்டிருக்கிறது.

இது குறித்து பயிலுநர் ஆசிரியர்கள் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

1990 ஆம் ஆண்டு ஒரு குறிப்பிட்ட பாடத்துக்குரிய பயிலுநர் ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்ட இவர்கள், 1991, 1992 ஆம் ஆண்டு காலப்பகுதியில் — தமது தகைமைகளுக்கு ஏற்ப — தாம் போதித்த பாடத்தை மாற்றித் தரும்படி கல்வித் திணைக்களத்திடம் விண்ணப்பித்திருந்தனர்

அவர்களின் கல்வித் தகைமைகளைப் பரிசீலித்த அப்போதைய யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் அவர்களில் ஒரு பகுதியினருக்கு — அவர்களின் தகைமையின் அடிப்படையில் — பாடத்தை மாற்ற அனுமதி வழங்கியிருந்தார்.

அதனடிப்படையில் — தமக்கு அனுமதிக்கப்பட்ட புதிய பாடத்துக்குரிய பாடநெறியை — தொலைக் கல்வி மூலம் பயின்று வந்த மேற்படி ஆசிரியர்கள், எதிர்வரும் ஏப்ரல் முதல் வாரத்தில் தமக்குரிய பாடத்துக்குரிய பரீட்சைக்கு தோற்றவிருக்கையில் —

அவர்களுக்கு வழங்கப்பட்ட பாடமாற்றம் செல்லுபடியற்றது என்றும்—

தாம் 1990 இல் தெரிவு செய்யபட்ட பாடத்துக்குரிய பரீட்சைக்கே அவர்கள் தோற்றவேண்டும் என்றும்—

கல்வித் திணைக்கள உயர்பீடம் அவர்களுக்கு கண்டிப்புடன் அறிவித்திருப்பதாக அறியவருகின்றது

கல்வித் திணைக்களத்தின் ஒருதலைப்பட்ச முடிவினால் பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள், இது குறித்து மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக இன்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு த. மகாசிவத்தை சந்திக்கவிருப்பதாகத் தெரியவந்தது. (உ)

மராட்டிய---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சிவசேனைப் பிரதிநிதியான — மனோகர் ஜோஷியைத் தெரிவு செய்தனர்.

அவர் இன்று மாலை 5 மணிக்கு சிவாஜி பார்க் ஆளுநர் முன்னிலையில் புதிய முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொள்வார்.

முன்னதாக நேற்று காங்கிரஸ் முதலமைச்சர் சரத்பவார் ஆளுநரைச் சந்தித்து தமது இராஜினாமாக் கடிதத்தைச் சமர்ப்பித்தார்.

அவரது கட்சிக்கு இத்தேர்தலில் 83 இடங்களே கிடைத்தன.

தேர்தலில் ஆகக்கூடிய இடங்களைப் பெற்ற கட்சி என்ற நிலையை காங்கிரஸ் பெற்றுள்ள போதிலும் புதிய ஆட்சியை அமைக்கும் முயற்சியில் தமது கட்சி ஈடுபடாது என்று அவர் ஆளுநரிடம் தெரிவித்தார் (உ)

சுழிபுரம--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இருவருமே இவ்வாறு பிடித்துச் செல்லபபட்டனர்.

இதேசமயம்—

கடந்த சனிக்கிழமை இரவு சுழிபுரம் சவுக்கடி கடற்பகுதியில தொழிலில் ஈடுபட்டிருந்த ஏழு மீனவர்கள் கடற்படையினரால் தாக்கப்பட்டனர்.

அன்றைய தினம் வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் வைத்து மூன்று மீனவர்கள் படையினரால் கைதுசெய்யப்பட்டது தெரிந்ததே. (ஐ-4)

இராணுவதினை---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஒன்றை நடத்தினர்.

அப்போதே அவர்கள் மேற் கண்டவாறு தெரிவித்தனர்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா முன்னர் காட்டிய அளவு அக்கறையை இப்போது காட்டவில்லை என்றும் செய்தியாளர் மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டது.

சமாதான முயற்சிகள் தடங்கலுற்றிருப்பதற்கு அரசாங்கமே காரணம் என்றும்—

நீண்டகாலப் பிரச்சினைக்கு அவசர அவசரமாக அரசியல் தீர்வு ஒன்றைக் கண்டு விடலாம் என்று அரசு கருதுமானால் அது நடைமுறைச் சாத்தியமாகாது என்றும்—

மோதல் தவிர்ப்பை போர் நிறுத்தமாக்க நடவடிக்கை எடுக்காமல் அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து அரசு பேசுகிறது என்றும் — செய்தியாளர் மாநாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இச்செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட தக[illegible] [illegible]திரிகைகள் முக்கியத்துவம் [illegible] தன. (அ-3)

'ஏ' குறூப் இரத்தம் அவசர தேவை

யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு 'ஏ' குறூப் இரத்தம் அவசரமாகத் தேவைப்படுவதாக இரத்த வங்கி பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

'ஏ' குறூப் இரத்தம் உடையவர்கள் இரத்ததானம் செய்து உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது (ஐ)

பதவி நீக்க வற்புறுத்து

கொழும்பு மாநகர சபை மேயராகப் பதவி வகிக்கும் திரு. கே கணேசலிங்கத்தைப் பதவி நீக்கஞ் செய்யும்படி, கொழும்பு மாவட்ட ஐ. தே. கட்சி எம் பிக்களில் சிலர் கட்சித் தலைமைப்பீடத்தை வற்புறுத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

திரு கணேசலிங்கம் மேயராக பணிபுரியும் விதம் குறித்து கொழும்பு மாநகர சபையில் உள்ள ஐ. தே க. உறுப்பினர்கள் பலரும் மாவட்ட ஐ தே கட்சி எம். பிக்கள் பலரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது

கடலில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனது படகைச் செலுத்துமாறு கூறி காங்கேசன் துறைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு வைத்து படையினர் எம்மை விசாரித்தனர்.

மீனுக்கு பதிலாக லக்ஸ்பிறே

விசாரணையின்போது எமது படகில் இருந்த மீன் வகைகளை தருமாறு கேட்டு வாங்கினர். தம்மிடம் பணம் இல்லை என்று கூறிய படையினர் அதற்குப் பதிலாக ''லக்ஸ்பிறே'' பக்கட்டுகளை எம்மிடம் தந்தனர்.

பின்னர் அங்குள்ள பொலீஸ் நிலையம் ஒன்றில் எம்மை ஒப்படைத்தனர்.

நாம் அங்கு தடுத்து வைக்கப்பட்டோம். அச்சமயம் [நேற்று முன்தினம்] அங்கு வந்த இராணுவத்தினர் நால்வர் எங்கள் மூவரையும் தனித்தனியே மிரட்டி விசாரித்தனர்.

தமக்கு தேவையான விறகுகளை வெட்டித் தருமாறு எம்மைப் பணித்தனர். நாம் விறகு வெட்டிக் கொடுத்தோம்.

பின்னர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் [illegible] எங்கள் மூவரையும் படையினரிடமிருந்து பொறுப்பேற்றனர் — என்றார். [ஐ-173]

பல்கலை ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வர்

பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் கல்விசார் ஊழியர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் கல்வி சாராத ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 10 வீத சம்பள உயர்வு தமக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கோரியே அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர். (ஐ-3)

உ
அம்பாள் துணை
கொக்குவில் - நந்தாவில்

கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய
மணவாளக் கோலத் திருவிழா

15 – 3 – 95 புதன்கிழமை

காலை 8-00 முதல் 11 மணி வரை சங்காபிஷேகம் (1008) நடைபெறும். மாலை 4-00 மணி முதல் விசேட பூஜை, நவசக்தி அர்ச்சனை, திருஊஞ்சல் நடைபெற்று அம்பாள் பூந்தண்டிகையில் திருவீதி உலாவரும் காட்சி நடைபெறும்.

விசேட மேளக்கச்சேரி: V. K. கானமூர்த்தி
V. K. பஞ்சமூர்த்தி சகோதரர்கள்

சமயச் சொற்பொழிவு: 'பிணிக்கு மருந்து' என்னும் பொருள் பற்றி.

நிகழ்த்துபவர்:
''தமிழருவி''
திரு. த. சிவகுமாரன்
[ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி – கம்பன் கழகம் காரைநகர்]

ஆலய பரிபாலன சபையினர்.

[35673]

வாழ்த்துகின்றோம்

இணுவில் சிவகாமி அம்மன் தேவஸ்தான திருமஞ்சத் திருப்பணி புரிந்த ஸ்தபதி

திரு. ஆறுமுகம் ஜீவரட்ணம்

அவர்கட்கு

13 - 03 - 95 அன்று மேற்படி சிற்பாலயத்தில் ஆயகலா விற்பன்னர் எனும் கௌரவ விருந்தளித்து உபசரித்தோம்.

இணுவைவளர் அருள் நெறி மன்றத்தைச் சேர்ந்த
இளைஞர்களின் அயராத முயற்சியாலே
மணிகலாபுரியும் சப்பரம் முன் படைத்த செம்மல்
மறைமுகமாய் அதிகாரத் தடைகள் தாண்டி
பணிபுரியக் கருத்தோன்றிப் பலரும் போற்றப்
பார்புகழ் சித்திர மஞ்சம் படைத்த செம்மல்
அவனிபுகழ் ஆறுமுகம் ஜீவரட்ணம்
ஆயகலா விற்பன்னன் அவன் சீர் வாழி.

திருமஞ்சத் திருப்பணிச் சபை

சிவகாமி அம்மன் கோயில்,
இணுவில்,
14 - 03 - 95
[35676]

முத்தமிழ்ப் பட்டிமன்றம்

23ஆவது தடவையாக அரங்கேற்றம்

நீர்வேலி வடக்கு ஸ்ரீகாளி அம்மன் ஆலய 10 ஆம் திருவிழா சிறப்பு நிகழ்ச்சியாக

இன்று செவ்வாய்க்கிழமை (14 - 03 - 95)
இரவு 10 மணிக்கு

முத்தமிழ்ப் பட்டிமன்றம் (இயல், இசை, நடிப்பு) இடம்பெறுகிறது.

தத்துவ அர்த்தங்கள் மேலோங்கி நிற்பது யார் பாடலில்?

கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்	கவிஞர் கண்ணதாசன்
கனக நாகேஸ்வரன் M.A.	எம்.எஸ். தயாளன் B A.
செ. சத்தியமூர்த்தி B.Sc.	எஸ். கணேசலிங்கம் B A.
பொன். மதிமுகராஜா J P	க. கனகரட்ணம்
பசு. ஸ்ரீபதி	கே. கே. இராஜரட்ணம்

நடுவர்: அ. குமாரவேலு B.A.

பட்டிமன்ற அமைப்பாளர்:
பொன். மதிமுகராஜா
எம் ஜி.ஆர். இல்லம், தாவடி,

✶ பட்டிமன்றத்திற்கு முன்னர் தெய்வீகப் பேருரை சிவநெறித்தொண்டன் செ. சத்தியமூர்த்தி **தேவி பாகவதம்** என்னும் பொருளில் உரையாற்றுவார்.

10 ஆம் திருவிழா உபயகாரர்
ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம்.
நீர்வேலி வடக்கு
(சி/753)

கண்ணீர் அஞ்சலி

காரைநகர் யா/கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலய உப அதிபர் பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளை அவர்களின் அருமைத் தாயார்

திருமதி
செல்லமுத்து சுப்பிரமணியம்

அவர்கள் சிவபதமடைந்ததையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

— ஆசிரியர் கழகம் —
யா/கலாநிதி ஆ. தியாகராசா
மத்திய மகாவித்தியாலயம்,
காரைநகர்.

(35677)